எங்கள் ரொறன்ரோ,   இதழ்  2,  மலர்  1

**ரொறன்ரோ மாநகரம் அதன் 175வது ஆண்டுநிறைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் தொடங்கியுள்ளது**

2009 மார்ச் மாதம் 6-ம் திகதி வெள்ளிக்கிழமை ரொறன்ரோ மாநகரத்தின் 175-வது ஆண்டுநிறைவு விழா தொடக்கி வைக்கப்பட்டது. தொடக்கவிழாவில் கலந்து கொள்வதற்கென ரொறன்ரோ மாநகர மண்டபத்துக்கு வருகைதந்த பெருவாரியான ரொறன்ரோவாசிகள் உபசரிக்கப்பட்டார்கள்.

நாள் முழுவதும் நீடித்த இலவச நிகழ்ச்சிகள் ரொறன்ரோ மாநகரத்தைப் போலவே பல்வண்மை வாய்ந்தவை. இன்று ரொறன்ரோவை ஒரு மகத்தான மாநகரமாகத் திகழ வைக்கும் கட்டடங்கள் சில உருவாகிய விதத்தைப் பார்க்கும் வாய்ப்பை அவை மக்களுக்கு அளித்தன.

மாநகர மக்கள் நேதன் பிலிப்ஸ் சதுக்கத்தில் சமூகக் குழு-இசைப்பாடல்ளைச் செவிமடுத்தார்கள், புகையெழுப்பி நோய்தீர்க்கும் தொல்குடிமக்களின் சடங்கைப் பார்த்தார்கள், முற்கால - தற்கால அவசர சேவை ஊர்திகளைக் கண்டார்கள்.

மாநகர மண்டபம் தொடர்ந்து களைகட்டியது. வட்டமண்டபச் சுவர்களில் தொங்கிய வரலாற்று ஒளிப்படங்களைள் சுற்றிப் பார்த்த மக்கள், மாநகரத்தின் கடந்த காலத்தை நினைவுகூர்ந்தார்கள். *Toronto's Visual Legacy: Official City Photography from 1856 to the Present* என்னும் நினைவு மலரை வாங்கினார்கள். மற்றவர்கள் ரொறன்ரோ பொது நூலக கிளைக்குச் சென்று, அங்கு வாசிக்கப்பட்ட கவிதைகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள். Bohemian Embassy Revival நிகழ்ச்சியில் சில நினைவுகளைப் பகிர்ந்தார்கள்.

தொடர்ந்து நிகழ்ந்த வேடிக்கை நிகழ்ச்சிகளின்பொழுது மன்றக் கூடத்தில் சிரிப்போசை எதிரொலித்தது. பள்ளிச் சிறாரும், ரொறன்ரோவின் முதலாவது மாநகராதிபதி வில்லியம் லயன் மைக்கென்சியாக நடித்த எரிக் பீற்றசனும் 1834-ல் நிகழ்ந்த முதலாவது மன்ற விவாதத்தை மேடையேற்றினார்கள். அன்று மாலை மைக்கென்சி, மாநகராதிபதி டேவிட் மிலர் இருவரும் கனடாவின் மிகப்பெரிய மாநகரத்தை நிர்வகிப்பதில் தாம் எதிர்கொண்ட சவால்களை ஒப்பிட்டு, வாதிட்டு, மகிழ்ந்தார்கள்.

toronto.ca/175

## மாநகராதிபதி டேவிட் மிலர் விடுக்கும் செய்தி

பொருளாதார உறுதிப்பாடு குலையும் வேளைகளில் தமக்குரிய பொதுச் சேவைகளைக் கட்டிக்காப்பதற்கும், அத்தகைய குலைவினால் பெரிதும் பாதிக்கப்படும் மக்களை ஆதரிப்பதற்கும் தமது அரசாங்கங்களையே மக்கள் நம்பியிருப்பர்.

தற்போதைய பொருளாதார மந்தம், குடும்பங்கள் பலவற்றை வருத்தி வருகிறது. பலர் தமது வேலைகளை இழந்துள்ளார்கள். மற்றவர்களின் வேலைநேரம் குறைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தை எண்ணி அவர்கள் கவலைப்படுகிறார்கள். எனினும், இக்கட்டு மிகுந்த இக்காலகட்டத்தைக் கடந்துசெல்வதில் தமது மாநகராட்சி மன்றம் தமக்கு உதவும் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

ரொறன்ரோ மாநகரத்தை நிர்வகிக்கும் எங்களிடம் 21-ம் நூற்றாண்டில் மேம்படுவதற்கு வேண்டிய திட்டவட்டான இலக்குத்திட்டம் உண்டு. தொழிலதிபர், தொழிலாளர், கல்வியாளர் தரப்பினருடன் கூடியே இந்த இலக்குத்திட்டம் உருவாக்கப்பட்டது. இது வளங்கொழிப்புத் திட்டம் (Agenda for Prosperity) எனப்படும். மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு எங்களால் இயன்றவரை பாடுபடுவதற்கு இத்திட்டம் எங்களுக்கு உதவும்.

இந்த மாநகரத்தின் எதிர்காலத்துக்கு வழிகாட்டும் நான்கு எளிய நெறிமுறைகள் இத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

- முதலாவதாக, எங்கள் பொது வளங்கொழிப்பைப் பேணுவதில் மாநகராட்சி மன்றம் முன்னின்று தலைமை ஏற்றுச் செயற்பட வேண்டும். அதனை, *செயற்படும் ரொறன்ரோ* (Activist Toronto) என்று கொள்வோம்.
- இரண்டாவதாக, உலகில் தனக்குரிய இடத்தைக் கண்டறியும் மாநகரமாக ரொறன்ரோ விளங்க வேண்டும். அதனை, *உலக ரொறன்ரோ* (Global Toronto) என்று கொள்வோம்.
- மூன்றாவதாக, பொருளாதார மேம்பாடு அடையும் வண்ணம் வடிவமைப்பு, உணவுப்பொருள் ஆக்கம், உயிர்மத் தொழினுட்பவியல் போன்ற பல்வேறு உற்பத்தித் துறைகளில் தனது ஆக்கத் திறனையும் வலுவையும் பயன்படுத்தும் மாநகரமாக ரொறன்ரோ விளங்க வேண்டும். அதனை, *ஆக்கவள ரொறன்ரோ* (Creative Toronto) என்று கொள்வோம்.
- அத்துடன், எல்லாவற்றுக்கும் மேலாக, எவரையும் கைவிடாத மாநகரமாக விளங்குவதற்கு ஏதுவாக நாங்கள் செயற்பட வேண்டும். அதனை *ஒரே ரொறன்ரோ* (One Toronto) என்று கொள்வோம். எங்கள் பொதுப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் நாங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

பெரிதும் உதவி தேவைப்படும் மக்களுக்குத் துணைநிற்கும் பொருட்டு, இந்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் பற்பல நடவடிக்கைகள் புகுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இந்த மாநகரத்தின் toronto.ca/torontohelps இணையத்தளத்திலும், இந்த *எங்கள் ரொறன்ரோ* இதழிலும் இடம்பெற்றுள்ளன.

நெடுங்காலமாக மாநகரத்தை நிர்மாணித்து, மக்களுக்கு உதவிய பெருமை வாய்ந்த வரலாறு உங்கள் ரொறன்ரோ மாநகராட்சி மன்றத்துக்கு உண்டு. மாணவர்களுக்கான எங்கள் உணவு-சத்துணவுத் திட்டங்கள்; ($40,259 தொகையிலும் குறைந்த ஆண்டு வருமானத்துடன் கூடிய நால்வர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு இலவச பொழுதுபோக்குத் திட்டங்கள் அளிக்கும்) எங்கள் வரவேற்புக் கொள்கை; இந்த ஆண்டில் TTC கட்டணங்களை நிலைநிறுத்தல். ரொறன்ரோ வாசிகளுக்கு நாங்கள் உதவ முயல்கிறோம் என்பதற்கு இவை யாவும் எடுத்துக்காட்டுக்கள்.

அதேவேளை, எங்கள் எதிர்கால பொருளாதார, சுற்றாடல் துறைகளிலும் நாங்கள் முதலீடு செய்ய வேண்டும் என்பைத நாங்கள் புரிந்துகொள்கிறோம். சூழவுள்ள மாநகரங்களுக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் எங்கள் தொழிலக வரியை நிர்ணயிப்பதே மாநகராட்சி மன்றத்தின் நெடுங்கால இலக்கு. தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ரொறன்ரோவில் உள்ள சிறிய தொழிலகங்களின் ஆதன வரியையும், வாடகைக்குக் குடியிருப்பவர்களின் ஆதன வரியையும் நாங்கள் குறைத்துள்ளோம்.

அவை முக்கிய நடவடிக்கைகள் ஆகும். மேலும், எங்கள் மாநகரத்தின் எதிர்காலத்தை நிலைநிறுத்துவதற்கு ஏதுவாக மத்திய, மாகாண அரசுகளிடமிருந்தும், தனியார் துறையிடமிருந்தும்

நிதியுதவியை ஈர்க்கும் அதிமுக்கிய முதலீடுகளையும் மாநகரம் மேற்கொண்டு வருகிறது. ஏற்கெனவே TTC பேருந்துச் சேவை அடைந்த பெருவிருத்தியில் – பயணத் தேவைக்கு ஈடுகொடுத்து, 900 வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்து, TTC-யின் வரலாற்றிலேயே அடைந்த மாபெரும் விருத்தியில் – இந்த இலக்குத்திட்டத்தின் பலாபலனை நாங்கள் காணலாம். அத்துடன், எங்கள் ரொறன்ரோ போக்குவரத்து மாநகரத் திட்டத்தின் (transitcity.ca) மூலம், ரொறன்ரோ குறிச்சிகள் அனைத்திலும் 21-ம் நூற்றாண்டுக்குரிய மென் தொடருந்துப் போக்குவரத்துச் சேவையைப் புகுத்துவதற்கு எங்கள் நிலைமுதல் வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக நாங்கள் புதிய முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம்.

காலநிலை மாற்றத்தையும், வீட்டுக் கீழ்த்தளக் கூடத்தில் நீர் சுவறல் போன்ற கடும் காலநிலைத் தாக்கங்களையும் எதிர்கொள்வதற்காகவும் எங்கள் நிலைமுதல் வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக நாங்கள் உறுதிவாய்ந்த முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம். எங்கள் 10 ஆண்டு-$25 பில்லியன் முதலீட்டுத் திட்டம் 300,000 வேலைவாய்ப்புகளை - இந்த ஆண்டில் மட்டும் 35,000 வேலைவாய்ப்புகளை - உருவாக்கிப் பாதுகாக்கும்.

கடைசியாகப் பொருளாதார மந்தம் பீடித்தபொழுது தவறுகள் இழைக்கப்பட்டதால், எங்கள் மாநகரவாசிகளுள் பெருந்தொகையானோர் உதவியும், நம்பிக்கையும் இழந்தார்கள். இன்று, பொது போக்குவரத்து, நீர் வழங்கல், மாநகராதிபதியின் கோபுர மறுசீரமைப்புத் திட்டம் போன்ற பொதுத் துறை, தனியார் துறை சார்ந்த அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடுசெய்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, கட்டிக்காப்பதில் ரொறன்ரோ மாநகரம் அதன் பங்கை நிறைவேற்றி வருகிறது. மாநகராதிபதியின் கோபுர மறுசீரமைப்புத் திட்டம் என்பது மாநகரவாசிகளின் எரிவளச் செலவுகளைக் குறைத்து, மாநகர சமூகங்களுக்குப் புத்துயிரூட்டுவதற்கு ஏதுவாக, 1950 காலகட்டத்தைச் சேர்ந்த கொங்கிறீட் பாளங்கள் கொண்ட கட்டடங்களை மறுசீரமைக்கும் திட்டமாகும்.

இவ்வாறு, எங்கள் எதிர்காலத்துக்கு நாங்கள் வலுவான அத்திவாரத்தை இட்டு வருகிறோம். அத்துடன், எதிர்காலத்தில் ரொறன்ரோ வாசிகள் அனைவரும் வளம்பெறும் வண்ணம் பசுமை வேலைவாய்ப்புகளையும், சூழலுக்குகந்த வேலைவாய்ப்புகளையும் நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

உலகம் எங்கள் மாநகரத்தைக் கண்டு நயக்கிறது. நாங்கள் பெருமைப்பட, பல நியாயங்கள் உண்டு: எங்கள் நிதித் துறை நிலைபேறு வாய்ந்தது, எங்கள் பல்கலைக்கழகங்களும் போதனா வைத்தியசாலைகளும் உலகளாவிய உயர்த்தி வாய்ந்தவை, எங்கள் திரைப்பட - தொலைக்காட்சி - புதிய ஊடகத் துறைகள் புதுமை வாய்ந்தவை. இவை சில எடுத்துக்காட்டுக்கள் மட்டுமே. எல்லாவற்றிலும் மேலாக, எவருடைய பின்புலத்தையோ வருமானத்தையோ பொருட்படுத்தாது, ரொறன்ரோவாசிகள் அனைவருக்கும், ரொறன்ரோ குறிச்சிகள் அனைத்திலும் உருப்படியான வாய்ப்பும் வளமும் கிடைப்பதற்கு ஏதுவாக நாங்கள் ஒத்துழைக்கும் விதத்தை எண்ணிப் பெருமைப்படலாம்.

இதுவே ரொறன்ரோ மாநகராட்சி மன்றத்தை நிருவகிக்கும் எங்கள் இலக்கு. அனைவருக்கும் வாழ்வும், வளமும், வாய்ப்பும் நல்கும் மாநகரத்தை நிர்மாணிக்கும் இலக்கை எய்துவதில் ரொறன்ரோவாசிகள் அனைவரும் பங்கு பற்றுகிறார்கள் என்பதை நான் அறிவேன். இந்த மகத்தான மாநகரத்தை நிர்மாணிப்பதற்கு நாங்கள் உங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றிய மேலதிக விபரங்களை இந்த *எங்கள் ரொறன்ரோ* இதழ் உங்களுக்கு வழங்கும்.

**மாநகராட்சி வகிக்கும் பங்கினைப் புலப்படுத்தும் வகையிலும், எதிர்கால பொருளாதாரத்தைக் குறித்து நடவடிக்கை எடுக்கும் வகையிலும் ரொறன்ரோ மாநகர வரவுசெலவுத் திட்டம் அமைந்துள்ளது**

ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் 2009-ம் ஆண்டுக்கான செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தை மார்ச் 31-ம் திகதி நிறைவேற்றியது. அன்றாடம் 24 மணித்தியாலங்களும், கிழமையில் 7 நாட்களும் மக்களைப் பாதுகாத்து, பணியாற்றுவதில் மாநகராட்சி மன்றம் வகிக்கும் பங்கினை வரவுசெலவுத் திட்டம் புலப்படுத்துகிறது. மாநகர செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தை மட்டுமன்றி, நிலைமுதல் வரவுசெலவுத் திட்டத்தையும் கடந்த திசம்பர் மாதம் மாநகராட்சி மன்றம் அங்கீகரித்தது. அதன்படி இந்த ஆண்டில் 35,000 வேலைவாய்ப்புகளையும், அடுத்துவரும் 10 ஆண்டுகளில் 300,000-க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளையும் உருவாக்கி, கட்டிக்காப்பதில் $25 பில்லியன் முதலீடு செய்யப்படும்.

மாநகரவாசி ஒருவரின் வாழ்க்கைத் தரத்தில் மிகவும் நேரடியான தாக்கத்தை விளைவிக்கும் பணிகளை மாநகராட்சி மன்றங்கள் ஆற்றிவருகின்றன. குறிப்பாக, பொருளாதார மந்தம் விளைவிக்கும் சவால்களை எதிர்கொள்வதற்கு மாநகரம் பாடுபடும் இந்த வேளையில் இது பேருண்மை ஆகும். வரியுதவித் திட்டங்கள், மாநகர நிர்மாண முதலீடுகள், வேலை தேடுவோர் - இளையோர் - முதியோர் நிகழ்வுத்திட்டங்களுக்கு நிதியுதவி மூலம் மாநகர வரவுசெலவுத் திட்டம் மக்களுக்குப் பேருதவி புரிகிறது.

போக்குவரத்து, சமூக சுகாதாரம் - நலவாழ்வு, பயனாளர் சேவை, சமூகத்தை ஈடுபடுத்தல், காலநிலை மாற்றத்தை தடுத்தல் உட்பட மாநகரத்தின் முதன்மை வாய்ந்த துறைகள் பலவற்றுக்கான புதிய முக்கிய முதலீடுகளும் செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. 2009-ம் ஆண்டுக்கான TTC கட்டணங்களையும், கழிவகற்றல் கட்டணங்களையும் ஏற்கெனவே மாநகரம் நிலைநிறுத்தியுள்ளது. பொருளாதார சரிவின்பொழுது வீடமைப்பு, நிர்மாணத் துறைக்கு உதவும்பொருட்டு 2011 ஜனவரி 31 வரை கட்டுமானக் கட்டணங்களை தற்போதைய விகிதப்படி மாநகரம் நிலைநிறுத்தியுள்ளது.

வதிவிட ஆதன வரியில் 4% அதிகரிப்பு என்பது, $387,680 பெறுமதி வாய்ந்தது என்று மதிப்பிடப்பட்ட ஒரு வீட்டின் வரியில் $89 அதிகரிப்பு என்று பொருள்படும். வருமானம் குறைந்த முதியோர், வலுதளர்ந்தோர் எதிர்நோக்கும் ஆதன வரி அதிகரிப்புகளை நீக்குவதற்கான அல்லது பின்போடுவதற்கான நிகழ்வுத்திட்டங்களை விரிவுபடுத்தும் பணி, செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு முக்கிய கூறாகும். ஆதன வரி அதிகரிப்பை நீக்கும் நிகழ்வுத்திட்டத்துக்கு உட்படுவதற்கான தொடக்க மட்டம், ஆண்டுக்கு $26,000 தொகையிலிருந்து $36,000 தொகைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. உச்ச மதிப்பீட்டு மட்டம் $454,000 தொகையிலிருந்து $525,000 தொகைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி இந்த நிகழ்வுத்திட்டத்துக்கு உட்படக்கூடிய வீடுகளின் எண்ணிக்கையில் 25% அதிகரிப்பு ஏற்படும். ஆதன வரி அதிகரிப்பை பின்போடும் நிகழ்வுத்திட்டத்துக்கு உட்படுவதற்கான தொடக்க மட்டம் $40,000-ஐவிடக் குறைந்த தொகையிலிருந்து $50,000-ஐவிடக் குறைந்த தொகைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. 2008-ம் ஆண்டு முதல் இந்த நிகழ்வுத்திட்டத்துக்கு உட்படக்கூடிய வீடுகளின் எண்ணிக்கையில் 32% அதிகரிப்பு ஏற்படும். வருமானம் குறைந்த முதியோர்க்கும், வலுதளந்தோர்க்கும் மாநகரம் நீர்க் கட்டணத் தள்ளுபடி வழங்கியுள்ளது. இந்நிகழ்வுத்திட்டங்களுக்கு அமைய விண்ணப்பம் முன்வைப்பது பற்றிய விபரங்கள், இறுதி ஆதன வரிக் கட்டணச் சீட்டுகளிலும், அடுத்த *எங்கள் ரொறன்ரோ* இதழில் உள்ளடக்கப்படும்.

ரொறன்ரோ மாநகர தொழிலக ஆதன வரியைத் தொடர்ந்து குறைக்கும் திட்டம், தொழிலக சூழ்நிலையை மேம்படுத்தும் மாநகரத் திட்டத்துக்கு உட்பட்ட திட்டமாகும். வரி உயர்வு நிகர மானியம், நற்கட்டுமானக் கூட்டுமுயற்சி, வலுவள குறைப்புக் கடன் நிகழ்வுத்திட்டம், பாரம்பரியம் காத்தல் ஊக்குவிப்பு முதலீட்டு மானியம், வரித் தள்ளுபடி நிகழ்வுத்திட்டங்கள் மூலமும் மாநகரம் தொழிலகங்களுக்கு உதவி வருகிறது. வரவுசெலவுத் திட்டத்தில் மாநகர ஆதன கைமாற்ற வரியோ (MLTT), பயண ஊர்தி வரியோ (PVT) உயர்த்தப்படவில்லை.

தற்பொழுது ஒரு நிகழ்வுத்திட்டத்தை மேற்கொள்வதற்கு அல்லது ஒரு நிலையத்தை வாடகைக்கு எடுப்பதற்கு ஆகும் செலவை ஈடுசெய்வதற்குப் பயனாளர்-கட்டணங்கள் செலுத்தப்பட

வேண்டியுள்ளன. அத்தகைய நிகழ்வுத்திட்டங்கள் பலவற்றின் பயனாளர்-கட்டணங்களுக்கு 3.7% பணவீக்க அதிகரிப்புகள் வரவுசெலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன (எடுத்துக்காட்டாக, வயதுவந்தவர்க்கான 12 வார நீச்சல் தடாக அனுமதிக் கட்டணம் தற்பொழுது $94.50 ஆகும். இதில் $3.50 அதிகரிப்பு ஏற்படும். ஆதலால் இனி அதற்கான கட்டணம் $98 ஆகும்). எனினும், நிகழ்வுத்திட்டங்களை மேற்கொள்வதற்காகும் செலவு முழுவதையும் இறுப்பதற்குப் பயனாளர்-கட்டணங்கள் போதா.

2009-ம் ஆண்டுக்கான செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத் தொகை $8.7 பில்லியன் ஆகும். மாநகர வரவுசெலவுத் திட்டத் தொகையில், மாகாண அரசு விதித்த செலவு-பகிர்வு நிகழ்வுத்திட்டங்களுக்கு 32% செலுத்தப்படுகிறது. மக்களுக்கும் தொழிலகங்களுக்கும் காவல்துறைச் சேவை, தீயணைப்பு, அவசர மருத்துவ சேவை அளிப்பதற்கு 17% செலுத்தப்படுகிறது. TTC கட்டணக் கூட வருமானத்தைக் கொண்டு ஈடுசெய்யப்படாத போக்குவரத்துச் சேவைக்காகும் செலவை இறுப்பதற்கு 16% ஒதுக்கப்பட்டுள்ளது. சோலை, வனம், பொழுதுபோக்கு, நூலகங்கள், தெரு பேணல், பனி அகற்றல், பொருளாதார விருத்தி, திட்டமிடல், மாநகர உரிம-நியமங்கள் போன்ற பிற மாநகர சேவைகளுக்காகும் செலவை இறுப்பதற்கு 14% ஒதுக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டம், நிலைமுதல் வரவுசெலவுத் திட்டம் இரண்டையும் மாநகரம் கொண்டுள்ளது. மாநகரத்தின் செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தைக் கொண்டு (மேலே விபரித்த) அன்றாட மாநகர சேவைகளுக்காகும் செலவு இறுக்கப்படுகிறது. இப்பணத்தைக் கொண்டு வேதனங்கள் மற்றும் வாடகை, எரிவலு, மின்வலு, உபகரணங்கள் முதலியவற்றுக்காகும் செலவு இறுக்கப்படுகிறது. மாநகர செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தைக் கொண்டு காவல்துறை, தீயணைப்பு, அவசர மருத்துவ சேவை, TTC, நூலகங்கள், சோலைகள், பொழுதுபோக்கு, பனி அகற்றல், தெரு போணல், சிறார் பராமரிப்பு மற்றும் பிற சேவைகளுக்காகும் செலவு இறுக்கப்படுகிறது.

கடந்த திசம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்ட 10 ஆண்டு-$25 பில்லியன் நிலைமுதல் திட்டத்தை மாநகரம் முன்வைத்துள்ளது. மாநகர நிலைமுதல் வரவுசெலவுத் திட்டத்தைக் கொண்டு தெரு நிர்மாணம், தெரு பேணல், போக்குவரத்து ஊர்திகள் கொள்வனவு, பெரு நிலையங்களின் கட்டுமானம், பெரும் உபகரணங்கள் கொள்வனவு என்பவற்றுக்காகும் செலவு இறுக்கப்படும். நிலைமுதல் திட்டத்தைக் கொண்டு மக்களுக்கும் தொழிலகங்களுக்கும் உதவும் சேவைகளை மேற்கொள்வதற்கு வேண்டிய மாநகர வசதிகளையும், அடிப்படைக் கட்டமைப்புகளையும் ஏற்படுத்தி, பேணுவதற்காகும் செலவு இறுக்கப்படும்.

## 2009-ல் உங்கள் வரிப்பணம் உங்களுக்குப் பயன்படும் விதம்




** வேறு – மாநகர ஆதனக் கணிப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (MPAC) விதிக்கும் கட்டணங்கள் போன்ற பொது நிர்வாகக் கட்டணங்கள், நிலையவசதிகள் போன்ற சிறிய மாநகர நிகழ்வுத்திட்டங்கள், ஆதனங்கள், பொருளாளர் அலுவலகம், சிறிய மாநகர முகமையமைப்புகள், Exhibition Place போன்ற ஆணையகங்கள், ரொறன்ரோ விலங்கினக் காட்சிக்களம் என்பன இவற்றுள் அடங்கும்.*

(for below)

வேறு வருவாய்கள்:

-ஆதன வாடகை
-வட்டி வருமானம்
-முதலீட்டு வருமானம்
-நன்கொடைகள்
-மீள்பாவனைப் பொருட்களின் விற்பனை
-வேறு பொருட்களின் விற்பனை
-காப்புறுதி இழப்பு மீட்புகள்
-வரிப் பதிவுச் சான்றிதழ்கள்

# வருவாய்த் துறைகள்




oronto.ca/budget2009

**வேலைவாய்ப்பு, நிதியுதவி நாடும் மாநகரவாசிகளுக்கு**
**ரொறன்ரோ வேலைவாய்ப்பு-சமூக சேவைத் துறை அளிக்கும் உதவி**

வேலைவாய்ப்பு, நிதியுதவி நாடும் ரொறன்ரோ வாசிகளுக்கு வேலைவாய்ப்பு-சமூக சேவைத் துறை உதவுகிறது. அதேவேளை, தனது வேலைவாய்ப்பு வகைவள நிலையங்கள் ஊடாக வேலைவாய்ப்பு உதவிகளையும் அது வழங்கி வருகிறது. அதன் 14 அலுவலகங்களிலும் பணியாற்றும் பயற்சிபெற்ற விற்பன்னர்கள், வேலையற்ற ரொறன்ரோ வாசிகளுக்கும், தமது தகைமைக்குக் கீழ்ப்பட்ட வேலை செய்யும் ரொறன்ரோ வாசிகளுக்கும் உதவி வருகிறார்கள். வேலை-தளர்த்தப்பட்டவர்களாகவும், ஏற்கெனவே வேலை செய்பவர்களாகவும் விளங்கும் அதேவேளை இன்னும் உறுதிவாய்ந்த, சிறந்த வேலை தேடுவோருக்கும் அவர்கள் உதவி வருகிறார்கள்.

அவர்கள் ஆற்றும் இலவச சேவைகள்: வேலை தேட உதவி, கணினி பயன்படுத்தும் வசதி, பணி விருத்திப் பட்டறைகள், வேலைவாய்ப்பு விளம்பரங்கள். பின்வரும் இணையத் தளத்தில் காணப்படும் வேலைவாய்ப்பு வகைவள நிலையங்கள் எவற்றிலும் கிடைக்கும் சேவைகளை ரொறன்ரோ வாசிகள் பயன்படுத்தலாம்: toronto.ca/socialservices.

நிதியுதவி தேவைப்படுவோருள் தகுதியுடையோருக்கு ரொறன்ரோ வேலைவாய்ப்பு-சமூக சேவைத் துறை அரிய நன்மைகள் புரிந்து, துணைநின்று வருகிறது. ‘‘ரொறன்ரோ வாசிகள் தாம் வாழும் சமூகத்தில் நலமுற, வளமுற வாழும் பாங்கினை வலுப்படுத்துவதே எங்கள் குறிக்கோள். அந்தக் குறிக்கோளை எய்துவதற்கு நாங்கள் அன்றாடம் அரும்பாடுபட்டு வருகிறோம்’’ என்கிறார் பொது முகாமையாளர் Heather MacVicar.

உணவு, உடை, உறையுள் மற்றும் பிற வதிவகச் செலவுகள், பல்வேறு மருத்துவப் பொருட்கள், சேவைகள் உட்பட நிதியுதவிகள் கிடைக்கும்.

ரொறன்ரோ வாசிகள் விண்ணப்ப நிலையத்தை அழைத்து உதவி கோரி விண்ணப்பிக்கலாம்: 416-397-0330. அல்லது இணைய வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம்: toronto.ca/socialservices. எங்கள் இணையப் பக்கத்தில் தகுதி மதிப்பிடும் வசதியும் உண்டு. தமக்கு உதவி கிடைக்குமா என்பதை மக்களே நிச்சயிப்பதற்கு அது உதவும். மாநகர வேலைவாய்ப்புச் சேவைகள், நிதியுதவிகள் பற்றிய முக்கிய விபரங்கள் அதில் காணப்படுகின்றன.

வேலைவாய்ப்பு-சமூக சேவைத் துறையின் முன்னெடுப்புகள் பலவும் மேற்படி இணையப் பக்கத்தில் காணப்படுகின்றன. இக்கடுங்காலத்தில் கடைத்தேறுவதற்கு வேண்டிய வாய்ப்புகளையும் உதவிகளையும் ரொறன்ரோ வாசிகளுக்கு அளிப்பதற்கு ஏதுவாகத் தொழிலகங்களுடனும், எங்களுடன் பங்குபற்றும் அமைப்புகளுடனும் நாங்கள் ஒத்துழைத்து வருகிறோம்.

416-397-0330 – உதவிக்கு விண்ணப்பம்
416-392-2956 – வேலைவாய்ப்பு-சமூக சேவைத் துறை பற்றிய பொது விபரங்கள்
toronto.ca/socialservices

**125 ஆண்டுகளாக நிலைத்துள்ள பொது சுகாதாரம்: தொற்றுநோய் தடுப்பு**

பாடசாலை செல்லும் உங்கள் பிள்ளைகள் ஏன் தடுப்புமருந்து ஏற்றவேண்டும், அல்லது நாங்கள் பாலை ஏன் சூடாக்கிப் பருகவேண்டும், அல்லது வதிவகம் என்பது ஏன் ஒரு சுகாதார அளவீடாகக் கொள்ளப்படுகிறது என்று நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? இவ்வினாக்களுக்கான விடைகளை Dupont வீதிக்கு வடக்கே, Spadina வீதியில் அமைந்துள்ள ரொறன்ரோ மாநகர சுவடிக்கூடத்தில் காணலாம்.

1883 முதல் இற்றைவரை தேர்ந்தெடுக்கப்பட்ட சுவடி–ஒளிப்படங்களும் ஆவணங்களும் இங்கு இடம்பெற்றுள்ளன. சிறார் சுகாதார சேவைகள், சுத்தமான நீரையும் காற்றையும் நாடி மேற்கொள்ளப்பட்ட முயற்சி, பொது வதிவகம்–சமூக சேவைகள் கண்ட விருத்தி ஆகிய விடயங்களை அவை விளக்குகின்றன.

ஏப்பிறில் மாத இறுதிவரை மேற்படி காட்சி தொடரும். முன்கூட்டியே சீட்டுக்களைக் கூட்டாகப் பதிவுசெய்து பார்வையிடலாம். 8ம் வகுப்பு மாணவர்களுக்கென வகுக்கப்பட்ட கற்கை நிகழ்வுத்திட்டம் ஒன்றைப் பயன்படுத்தும்படி பாடசாலைக் குழுமங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். ஏனைய வகுப்பினரும் வருகை தருக.

416-397-5000
toronto.ca/archives

**வருமானம் குறைந்த இளையோருக்கும், தகுதியுடைய முதியோருக்கும் இலவச பல்வைத்திய பராமரிப்பு வசதி பெருகி வருகிறது**

ஒன்ராறியோ அரசின் ஏழ்மைத் தணிப்பு இலக்குத்திட்டத்தின் ஓர் அங்கமாக, வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறாருக்கு அவசர, அத்தியாவசிய பல்வைத்திய பராமரிப்பு வசதியைப் பெருக்குவதற்காக ரொறன்ரோ சுகாதாரத் துறையும், மாகாணம் எங்கும் உள்ள பொது சுகாதார நிலையங்கள் பிறவும் மேலதிக நிதிவசதி பெற்றன.

சிகிச்சை தேவைப்படும் ரொறன்ரோ மாநகர சிறார் என்னும் நிகழ்வுத்திட்டத்தின் மூலம், வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 17 வயதும் அதற்கு உட்பட்ட வயதும் கொண்ட சிறாருக்கு அவசர பல்வைத்திய பராமரிப்பு அளிக்கப்படுகிறது. முன்னர் அதற்குத் தகுதி பெறும் வயது பிறப்பு முதல் 13 வயது வரையாக இருந்தது.

"ஒருவரின் பல்நலம் குன்றுவதால் அவருடைய வாழ்க்கைத் தரமும் குன்றும் என்பது ஒரு வைத்தியர் என்ற வகையில் எனக்குத் தெரியும். அதனால் அவருடைய உளவுறுதியும், வேலைவாய்ப்பினைக் கண்டடையும் ஆற்றலும், பிறருடன் உறவாடும் ஆற்றலும் வெகுவாகப் பாதிக்கப்படக் கூடும்" என்றார் ரொறன்ரோ மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி Dr. David McKeown.

அத்துடன், பல்-தொற்று வியாதிகளுக்குச் சிகிச்சை அளிக்காவிட்டால், இதய, சுவாச நோய்கள், நீரிழிவு போன்ற நீடித்த நோய்கள் உண்டாக வழிபிறக்கும்.

"பொருளாதார உறுதிப்பாடும், வேலைவாய்ப்பும் குன்றிவரும் இத்தருணத்தில், குறிப்பாக ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் பல்வைத்திய நிகழ்வுத்திட்டத்தைப் பெருக்கல் நலம். பெற்றோரால் தத்தம் பிள்ளைகளுக்கான அடிப்படைப் பல்வைத்திய பராமரிப்புக்கு ஆகும் செலவை இறுக்க முடியாத நிலை மேன்மேலும் பெருகும் என்று எம்மால் ஆரூடம் கூறமுடியும். எல்லா வயதினருக்கும் பல்வைத்திய பராமரிப்பு வசதியைத் தொடர்ந்து மேம்படுத்துமாறு மாகாண அரசிடம் நாம் கேட்டுக்கொள்கிறோம்" என்று Dr. David McKeown மேலும் தெரிவித்தார்.

தகுதியுடைய சிறியோருக்கும் முதியோருக்கும் 30-க்கு மேற்பட்ட மொழிகளில், 10 பொது பல்வைத்தியக் களங்களிலும், சமூக மருத்துவ நிலையங்களுக்கு உட்பட்ட வேறு 4 களங்களிலும் பல்-வைத்திய சேவைகளை ரொறன்ரோ சுகாதாரத் துறை முன்வைத்து வருகிறது.

416-338-7600
toronto.ca/health

**சமூக பங்கேற்பு—முதலீட்டு நிகழ்வுத்திட்டம் (CPIP)**

ரொறன்ரோ மாநகரக் குறிச்சிகள், பல்வேறு சமூகங்கள் என்பவற்றின் பல்வேறு தேவைகளையும் நிறைவேற்றுவதில் இம்மாநகராட்சி மன்றம் மாநகர சமூகங்களுடன் பங்காற்றி வருகிறது. சமூக பங்கேற்பு—முதலீட்டு நிகழ்வுத்திட்டம் (CPIP) அதில் ஒன்று. ரொறன்ரோவில் சமூகத்துக்குச் சேவையாற்றி, சமூகத் திறனைக் கட்டியெழுப்பி, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு, சமூக பங்கேற்பு—முதலீட்டு நிகழ்வுத்திட்ட நிதியுதவிச் செயற்பாடுகள் உதவுகின்றன. ஒதுக்குப்பட்ட சமூகங்களுக்கும், பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய சமூகங்களுக்கும் உதவுவதில் 900-க்கு மேற்பட்ட அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. CPIP உதவும் பல நிகழ்வுத்திட்டங்களுள் பாதுகாப்பு, சமூக சேவைகள், பொழுதுபோக்கு, தேடிய தடுப்புவலு தேய்வுப் பிணி (AIDS), போதைப்பொருள் தடுப்பு, வதிவகவசதி, வதிவகமின்மை, மாணவர் சத்துணவு சார்ந்த திட்டங்கள் சிலவாகும்.

வாய்ப்பளிப்பு, நியாயப்பாடு, சமத்துவம், வெளிப்படை, தெளிவு, பொறுப்புடைமை, இசைவு நெறிகளின்படியே மாநகரம் நிதியுதவிச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

சேவைத் துறை ஒவ்வொன்றும் மாநகர இலக்குத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி மன்றத்தால் திட்டவட்டமாக முதன்மை அளிக்கப்பட்ட விடயங்களைக் குறித்து அவை நடவடிக்கை எடுக்கும். குடிமக்கள் பங்குபற்றல், குறிச்சிகளை வலுப்படுத்தல், தொழிலக சூழ்நிலையை மேம்படுத்தல், சமூகத்தின் திறனைக் கட்டியெழுப்பல், அனைவருக்கும் சமவாய்ப்பு, பல்வண்மை என்பன அவற்றுள் அடங்கும். சமூக, பொருளாதார, பண்பாட்டுக் குறிக்கோள்களை எய்தும் நோக்குடனேயே சமூக நிதியுதவி நிகழ்வுத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநகரம் நெகிழ்ந்து சேவையாற்றுவதற்கு அவை துணைநிற்கின்றன. குறிச்சிகளுக்குரிய மாதிரி நிகழ்வுத் திட்டங்களை அவை பயன்படுத்துகின்றன. சுற்றுலா வருமானத்தைப் பெருக்குகின்றன. தொழிலமைப்புகள் தமக்கு வேண்டிய வளங்களை வேறு தோற்றுவாய்களிலிருந்து ஈட்டிக்கொள்வதற்கு அனுமதிக்கின்றன.

(2009ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின்படி) உறுதிவாய்ந்த ஒரு சமூக சேவைத் துறை சமூகத்துடன் கூடி, சமூகத்துக்காகப் பாடுபட்டு, சமூகப் பிரச்சனைகளை இனங்கண்டு, அவற்றுக்கு உள்ளூரிலேயே தொண்டர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு ஏற்ற நிகழ்வுத்திட்டங்கள், சேவைகள் மூலம் பதில்நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக சமூக பங்கேற்பு—முதலீட்டு நிகழ்வுத்திட்டத் துறை $45 மில்லியன் தொகையை முதலீடு செய்யும். 2008ல் சமூக பங்கேற்பு—முதலீட்டு நிகழ்வுத்திட்ட நிதியுதவிச் சேவைகளை மேற்கொள்வதற்கு 100,000-க்கு மேற்பட்ட தொண்டர்கள் உதவினார்கள்.

**மாநகரம் துணைநிற்கும் நிகழ்வுத்திட்டங்களுக்கும், சேவைகளுக்கும் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:**

## St. Christopher House

- இந்த அமைப்பு வழங்கும் சேவைகளுள் பின்வருவன அடங்கும்: வயதுவந்தோர் எழுத்தறிவு, சிறார்-இளையோர் நிகழ்வுத்திட்டங்கள், சமூக விருத்தி, முதியோர் இம்சை தடுப்பு நிகழ்வுத்திட்டம், வயதுவந்தோர் சந்திப்பு, முதியோர் நிலையம், ஊர்தி உணவு, அக உதவி, சேவைபெறுவோர்க்குத் துணைநிற்றல், குடியமர்த்தல் சேவைகள், கோடை நாள் முகாம் நிகழ்வுத்திட்டம், வதிவகமற்றோர் சந்திப்பு நிகழ்வுத்திட்டம்.

- 2007-ல் மேற்படி அமைப்பு 11,176 பேருக்குப் பணியாற்றியது.

- 2008-ல் இந்த அமைப்பு மேற்கொண்ட எட்டு நிகழ்வுத்திட்டங்களுக்கு, சமூக சேவை பங்கேற்புத் துறையின் ஊடாக, மொத்தம் $192,385 அங்கீகரிக்கப்பட்டது.

**பிளெமிங்டன் அயற்புறச் சேவை (Flemingdon Neighbourhood Services)**

- முதலீட்டு முதன்மை வாய்ந்த குறிச்சிகள் உட்பட ரொறன்ரோ, ஈஸ்ட் யோர்க், நோர்த் யோர்க், ஸ்காபறோ, சமூக மன்றக் குறிச்சிகளில் வசிக்கும் பயனாளர்களுக்கு இந்த அமைப்பு பணியாற்றி வருகிறது.
- இந்த அமைப்பு அதன் வதிவக உதவித் திட்டங்கள் ஊடாக ஆற்றும் சேவைகளுள் பின்வருவன அடங்கும்: வதிவகம் தேடுவதில் உதவி, சகாய வதிவக வசதி, குடியிருப்பாளர்களுக்கும் சேவையாளர்களுக்கும் வதிவகப் பட்டறை, வழங்கீட்டுக் கட்டண உதவி, உடைமையாளருடன் சந்திப்பு, குடியிருப்பாளர் வதிவகத்தில் நிலையூன்ற உதவி. வெளியேற்றத்தை தடுக்கும் சேவைகளுள் பின்வருவன அடங்கும்: அறிவுறுத்தல், வாதாடல், வாடகை வங்கியுடன் தொடர்புபடுத்தல். குறிச்சி எங்கும் களம் கடந்தும் வதிவக சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 2007-ல் மேற்படி திட்டங்கள் மூலம் 1,500 பயனாளர்கள் பயனடைந்தார்கள்.
- 2008-ல் வதிவகமற்றோர் நடவடிக்கை நிதியத்தின் ஊடாக மொத்தம் $242,378 அங்கீகரிக்கப்பட்டது.

**ஒன்ராறியொ பிலிப்பினோ மாதர் நிலையம் (Philippine Women Centre of Ontario)**

- பிலிப்பினோ இனப் பெண்கள் தாம் எதிர்கொள்ளும் தடங்கல்களின் தோற்றுவாய்களைப் புரிந்துகொண்டு, கனடிய சமூகத்தில் தமது உரிமைகளை ஈட்டிக்கொள்ள உதவியும் வலுவும் அளிக்கும் சேவைகளையும் நிகழ்வுத்திட்டங்களையும் இது மேற்கொண்டு வருகிறது.
- 2008ல் வாய்ப்பு-சமத்துவ மற்றும் மனித உரிமை பங்கேற்பு முதலீட்டு நிகழ்வுத்திட்டத்தின் ஊடாக, திறன் பெருக்க வாதாட்டத் திட்டம் ஒன்றுக்கு $10,000 அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டத்தை வகுத்த நோக்கம்:
  - சமூகத்துள் உட்படுத்தல், குடிமக்கள் பங்குபற்றல் தொடர்பாக பிலிப்பினோ சமூகத்தில் ஆராய்ச்சி செய்தல்
  - பொதுக் கொள்கை வகுக்கும் படிமுறையில் அங்கத்தவர்களை ஈடுபடுத்துவதற்காக பெண்களுக்கும் இளையோர்க்கும் இனவாத எதிர்ப்பு போதனைப் பட்டறை நடத்தல்

**தொல்குடிச் சிறார் - குடும்ப சேவை (Native Child and Family Services of Toronto)**

- ரொறன்ரோ மாநகரம் எங்கும் வாழும் சுதேசிய சமூகத்தவர்களுக்கு இது சேவையாற்றி வருகிறது. பாதுகாப்புச் சேவைகள், சிகிச்சை – குணப்படுத்தல் நிகழ்வுத்திட்டங்கள், தடுப்புச் சேவைகள், இளையோர் சேவைகள் என்பன அவற்றுள் அடங்கும்.
- 2008ல் பெரும் பொழுதுபோக்கு பங்கேற்பு நிகழ்வுத்திட்டத்தின் ஊடாக முழுமுதற் குடிமக்களின் சமூக பொழுதுபோக்கு நிகழ்வுத்திட்டத்துக்கு $10,000 அங்கீகரிக்கப்பட்டது. இந்நிகழ்வுத்திட்டத்துள் பின்வருவன அடங்கும்:
  - ஸ்காபறோ குறிச்சியில் வாழும் சுதேசியச் சிறுவர்கள், இளையோர்க்கான சமூக பொழுதுபோக்கு நிகழ்வுத்திட்டங்கள் அனைத்தையும் இயைபுபடுத்தல்
  - மரபுநெறி உரையாடல் வட்டங்கள்
  - எடுத்துக்காட்டுகள்: பொழுதுபோக்குச் செயற்பாடுகள் – நீச்சல், கூடி முரசு கொட்டல், கூடி நடனம் ஆடுதல் முதலியன.

toronto.ca/divisions/sda.htm

**ஈயக் குழாய்களை மாற்றும் பணியை ரொறன்ரோ தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது**

குடிநீரில் ஈயம் கலந்திருப்பது குறித்து மாநகரம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மாநகரவாசிகள் ஈயக் குழாய்கள் பற்றி அறிய வேண்டியது என்ன? அவற்றால் யாருக்கு கெடுதி விளையக் கூடும்? நிலைமையைச் சரிப்படுத்துவதற்கு மாநகரம் என்ன செய்து வந்துள்ளது? அவற்றுக்கான விடைகள் வருமாறு:

ரொறன்ரோ மாநகர நீர் வழங்கல் கட்டுக்கோப்பில் 470,000க்கு மேற்பட்ட குழாய்நீர் இணைப்புகள் (தரையின் கீழ் தாழ்த்தப்பட்ட மூலநீர்க்குழாயிலிருந்து ஒரு தனிக் குடும்ப வளவுக்குரிய குழாய்வரை செல்லும் இணைப்புகள்) இருக்கின்றன. இந்நீர் வழங்கும் இணைப்புகளைப் பேணுவது மாநகரத்தின் பொறுப்பு. அவற்றுள் பருமட்டாக 60,000 இணைப்புகள் ஈயத்தால் ஆனவை. அத்துடன், வளவுக்குரிய குழாயிலிருந்து வீட்டினுள் செல்லும் ஈயக் குழாய்களிலும், வீட்டினுள் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கட்டுக்கோப்பிலும் ஈயம் இருக்கக்கூடும். வீட்டுநீர்க் குழாய்களைப் பேணுவது வீட்டுச் சொந்தக்காரரின் பொறுப்பு.

1950களின் முன்னரைக் கூறில் அமைக்கப்பட்ட வீடுகள் பெரிதும் ஈயக் குழாய்கள் கொண்டவை. அவை இம்மாநகரத்தின் பழைய குறிச்சிகளில் காணப்படுபவை. ஈயக் குழாய்கள் நாட்பட நாட்படக் கறள்கட்டி, குடிநீருள் ஈயத்தைக் கசியவிடும். கெடுதி விளையும் வாய்ப்பைத் தவிர்ப்பதற்கு, ஈயக் குழாய்களை அகற்றுவதே சிறந்த வழி. 1950-களுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட வீடுகளில் ஈயக் குழாய்கள் இல்லை. வதிகூடக் கட்டடங்கள், சொந்த வதிகூடக் கட்டடங்கள் எத்துணை பழையவை ஆயினும், ஈயக் குழாய்கள் அற்றவை.

ஒன்பது ஆண்டுக் காலப்பகுதியுள் இம்மாநகரத்துக்குச் சொந்தமான ஈயக் குழாய் இணைப்புகளை அகற்றுவதற்கான நிகழ்வுத்திட்டத்தை 2007-ல் ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் அங்கீகரித்தது. இது வட அமெரிக்காவிலேயே மிகவும் மும்முரமான குழாய்வகை நிகழ்வுத்திட்டங்களுள் ஒன்று. மாநகராட்சி மன்றம் அதன் ஈயக் குழாய்களை அகற்றும் அதேவேளையில், வீட்டுச் சொந்தக்காரரும் தமது ஈயக் குழாய்களை அகற்றும்படி நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். வளவின் பருப்பம், பயன்படுத்தப்படும் பொருள்வகைகள் முதலியவற்றைப் பொறுத்து வீட்டுச் சொந்தக்காரரின் ஈயக் குழாய்களை மாற்றுவதற்கு பருமட்டாக $1,800 முதல் $3,000 வரை செலவாகலாம். ஒவ்வொரு குறிச்சியிலும் குழாய் மாற்றும் பணியில் ஈடுபடும் மாநகர ஒப்பந்திகள் பணியில் இறங்குவதற்கு சற்று முன்னர் வீட்டுவாசிகளுடன் தொடர்புகொள்வார்கள்.

குழாய் மாற்றும் திட்டம் பூர்த்திசெய்யப்படும் வரை, நீரைப் பாய்ச்சும் எளிதான உத்தியைக் கைக்கொண்டு ஈயத்தின் தாக்கத்துக்கு உள்ளாகும் வாய்ப்பைக் குறைக்கலாம். நீர் குளிரும்வரை குழாய் முனையைத் திருப்பி, குறைந்தது ஒரு நிமிடம்வரை பாயவிடுவதன் மூலம் குழாயில் ஈயத்தின் தாக்கத்துக்கு உள்ளாகும் வாய்ப்பைக் குறைக்கலாம். ஈயக் குழாய்கள் பொருத்தப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் நீர் பருகுவதற்கு அல்லது சமைப்பதற்கு **முன்னர்** அப்படிச் செய்ய வேண்டும். நீரைக் கொதிக்க வைத்து ஈயத்தை அகற்ற முடியாது. இவ்வாறு அன்றாடம் பற்பல தடவைகள் குழாய்நீர் பாய்ச்சுவதை விடுத்து, ஒரு பாத்திரத்தில் நீரை இட்டு, அதனைக் குளிர்பதனியில் வைத்து எடுத்துப் பயன்படுத்துவதன் மூலம் நீர் விரயத்தைத் தவிர்க்கவும்.

வயதுவந்தவர்களின் உடலில் உள்ள ஈயத்தின் அளவை குடிநீரில் உள்ள ஈயம் தனியே பெருக்குவது அரிது. எனினும், ஆறு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளும், சிசுக்களும் ஈயத்தின் பாதிப்புகளுக்கு உள்ளாவர். உங்கள் வீட்டில் ஈயக் குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தால், உங்களுக்கு ஆறு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள், குறிப்பாக குழாய் நீர் கலந்து தயாரித்த பால்மா உட்கொள்ளும் குழந்தைகள் இருந்தால், நீங்கள் கர்ப்பம் தரித்திருந்தால், முன்னெச்சரிக்கையாக, தேசிய துப்புரவு அமைப்பின் சான்றிதழுடன் கூடிய வடிகலம் ஒன்றைப் பயன்படுத்தி, ஈயத்தை அகற்றும்படி ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை விதந்துரைக்கிறது. ஒரு வடிகலத்தை வாங்கும்பொழுது, அதில் NSF-53 அடையாளம் பொறிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கவும்.

**ஈயப் பரிசோதனை**

பழைய வீடுகளில் வசிப்பவர்கள் ரொறன்ரோ நீர்ப் பரிசோதனைக்கூடத்துடன் தொடர்புகொண்டு, இலவச ஈயப் பரிசோதனைக்குப் பதிவுசெய்யவும்: 416-392-2894. ரொறன்ரோ பொது சுகாதார அலுவலகம் ஒன்றுக்குச் சென்று விசேட புட்டி ஒன்றையும், மாதிரிநீர் ஏந்துவது பற்றிய

அறிவுறுத்துரைகளையும் பெற்றுக்கொள்ளும்படி பதிவுசெய்பவர்களிடம் கேட்கப்படும். மாதிரிநீர் கிடைத்ததும், ரொறன்ரோ நீர் பரிசோதனைக்கூடம் ஈயப் பரிசோதனை நடத்தி, அதன் பெறுபேறுகளை சம்பந்தப்பட்ட வாசிகளுக்கு அறிவிக்கும்.

ரொறன்ரோ சுகாதாரத் துறையின் பின்வரும் அலுவலகங்களில் ஈயப் பரிசோதனை அணியக்கூடுகள் கிடைக்கும்:

**மேற்குப் பிராந்தியம்**
Etobicoke Civic Centre, 4-ம் மாடி
399 The West Mall, Burnhamthorpe Road-யில்

**வடக்குப் பிராந்தியம்**
North York Civic Centre, 2-ம் மாடி
5100 Yonge Street, Sheppard Avenue-க்கு வடக்குப் புறம்

**கிழக்குப் பிராந்தியம்**
1530 Markham Road, 5-ம் மாடி
At Milner Avenue, 401-நெடுஞ்சாலைக்கு வடக்குப் புறம்

**தெற்குப் பிராந்தியம்**

- 2340 Dundas Street West, Dundas West சுரங்கத் தொடருந்து நிலையத்துக்கு அருகேயுள்ள பிரதான உட்புறம்; Crossways எனப்படும் இடம்.
  44 Victoria Street, 18-ம் மாடி, Adelaide Street, north of King Street--க்கு வடக்குப் புறம்
- East York Civic Centre, பிரதான உட்புறம் 850 Coxwell Avenue, Mortimer Avenue-ல்

toronto.ca/water
toronto.ca/health/lead

**ரொறன்ரோ/பொற்ஸ்வானா தேய்வுநோய் பராமரிப்பு பங்கேற்பு நிகழ்வுத்திட்டம் இளையோர்க்குத் துணைநின்று வருகிறது**

உலகிலேயே மனித தடுப்புவலு தேய்வுப் பிணி நுணங்கி/தேடிய தடுப்புவலு தேய்வுப் பிணி (HIV/AIDS) மிகவும் அதிகமாகக் தொற்றிப்பரவும் தேசங்களுள் பொற்ஸ்வானா ஒன்று. ரொறன்ரோ மாநகரத்தின் சார்பாக, இந்த நோயின் கொடூரத்தை எதிர்கொள்ளும் திறனையும். நிபுணத்துவத்தையும் பரிமாறும் பணிக்கு ரொறன்ரோ சுகாதாரத் துறை தலைமை வகித்து வருகிறது. விரிந்துபரவும் HIV/AIDS பிணியை எதிர்கொள்ளும் நோக்குடன் இலாப நோக்கற்ற தனியார் முகமையகங்களுடன் ரொறன்ரோ சுகாதாரத் துறை ஒத்துழைப்பை மேம்படுத்தி வருகிறது. எடுத்துக்காட்டாக, பொற்ஸ்வானாவில், அகத்தில் நிலைகொண்டு பராமரிக்கும் பணியாளர்களுக்கு, AIDS பிணியின் இறுதிக் கட்டத்தில் உள்ளவர்களின் நோயைத் தணித்து, அவர்களுக்குத் துணைநிற்பதில் Casey House ஆற்றுப்படுத்தல், பயிற்சி என்பவற்றை அளித்தது.

இளையோரை ஈடுபடுத்துவதில் புலனைச் செலுத்தியே மேற்படி ஒத்துழைப்பு தற்பொழுது பெரிதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இளையோரைக் கருத்தில்கொண்டு மேற்கொள்ளப்படும் கல்வி, பண்பாட்டு, பொழுதுபோக்கு முன்னெடுப்புகள் HIV/AIDS தடுப்பில் மிகவும் வெற்றி அளித்துள்ளன. குறிப்பாக பொற்ஸ்வானாவில் வசிக்கும் இளையோர் உதைபந்தாடி மகிழ்பவர்கள். ஆதலால் ரொறன்ரோ மாநகரம், தென் கிழக்கு மாவட்ட மன்றம், கனடா பொதுநலவாய விளையாட்டு அமைப்பு, கென்யா-மதரே இளையோர் விளையாட்டுச் சங்கம் என்பன ஒன்றுசேர்ந்து, இளையோர் தலைமையில் தென் கிழக்கு மாவட்ட இளையோர் வலுப்பேறுக் கழகம் (SEDYEL) என்று தற்பொழுது குறிப்பிடப்படும் Kicking AIDS Out முன்னெடுப்பு ஒன்றை மேற்கொண்டன. பொற்ஸ்வானாவின் தென் கிழக்கு மாவட்டத்தில் புதிய இளையோர் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 100 அணிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 27 மகளிர் அணிகள் (பொற்ஸ்வானாவில் முதல் தடவையாக அமைக்கப்பட்ட அணிகள்!). அம்மாவட்டக் கிராமங்கள் அனைத்தையும் சேர்ந்த சிறாரும், இளையோருமாக 2,000 பேர் SEDYEL செயற்பாடுகளில் பங்குபற்றுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட மேற்படி இளையோர் நிலையத்தை மன்றாளர் கைல் ரே (Councillor Kyle Rae) திறந்து வைத்தார். ரொறன்ரோ மாநகரத்தின் உலக தேய்வுப்பிணி நிதியத்தின் ஊடாகவே அந்த நிலையத்துக்குப் பெரிதும் நிதியுதவி புரியப்படுகிறது. கனடிய மாநகராட்சி மன்றக் கூட்டவையின் (FCM) நிதியுதவியுடன் மன்றாளரும், ரொறன்ரோ சுகாதாரத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் – Barbara Emanuel, Liz Janzen – இருவரும் திறப்புவிழாவிலும் கொண்டாட்டத்திலும் முன்னின்று பங்குபற்றினார்கள். அந்த நிகழ்ச்சியில் 300 பேர் கலந்துகொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

“ரொறன்ரோ மாநகரின் கருணையும், கவனிப்பும், தயாளமும் இங்கு எதிர்கால நம்பிக்கைக்கு அடிகோலியுள்ளது. பொற்ஸ்வானாவின் கிராமவாசிகள் உதைபந்தாடி, HIV/AIDS பிணியைத் தடுக்கக் கற்றுக்கொள்ள ஈந்த கொடையைக் குறித்து ரொறன்ரோ மாநகரம் பெரிதும் பெருமைப்பட முடியும்” என்று மன்றாளர் கைல் ரே குறிப்பிட்டார்.

மேற்படி ஒத்துழைப்பு முயற்சியில் வன்முறை–தடுப்பு என்பது ஒரு திட்டவட்டமான நோக்கமாக என்றுமே குறிப்பிடப்படவில்லை. எனினும், SEDYEL செயற்பாடுகளின் விளைவாக இளையோரிடையே வன்முறை வெகுவாகக் குறைந்திருப்பதை இடைநிகழ்வுச் சான்றுகள் புலப்படுத்துகின்றன. அன்றைய சண்டியர் குழுவினர் இன்றைய தலைமைப் பதவிகளில் இருக்கிறார்கள். மாவட்ட இளையோருள் பலர் உதைபந்தாட்டக் கழகங்களில் பயிற்றுநர்களாகவும், நடுவர்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும், சகாக்களின் போதனையாளர்களாகவும், அரங்கக் கலைஞர்களாகவும் விளங்குகிறார்கள்.

toronto.ca/health/botswana_index.htm

**உங்கள் வீட்டைப் புனரமைக்கப் போகிறீர்களா? அவதானம் – அனுமதிப் பத்திரம் பெறுக!**

**எனக்கு கட்டட அனுமதிப் பத்திரம் எதற்காக?**
உங்கள் வீட்டுக் கட்டமைப்பில் எத்தகைய மாற்றத்தையும் பத்திரமாகச் செய்வதற்கு கட்டட அனுமதிப் பத்திரம் உதவும். கட்டட அனுமதிப் பத்திர நடைமுறையின் ஓர் அங்கமாக, ரொறன்ரோ கட்டடத் துறையின் பணியாளர்கள் உங்கள் திட்டங்களை மீள்நோக்கி, அவை மாகாண, மாநகர பாதுகாப்பு /கட்டட விதிக்கோவைகளுக்கும் உபவிதிகளுக்கும் அமைவாக உள்ளனவா என்று பார்க்க வேண்டும். கட்டுமானப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்கு உதவும் யோசனைகளை திட்டப் பரிசீலனையாளர்களாலும், பரிசோதனையாளர்களாலும் உங்களிடம் பெரிதும் தெரிவிக்க முடியும். சென்ற ஆண்டு மாநகரம் 34,456 கட்டட அனுமதிப் பத்திரங்களை வழங்கியது.

**கட்டட அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு எவ்வளவு காலம் செல்லும்?**
துரித வசிப்பிட மீள்நோக்குச் சேவை (Residential FASTRACK review service) ஒன்றை ரொறன்ரோ மாநகரம் முன்வைத்துள்ளது. பருப்பமும், சிக்கலும் குறைந்த திட்டங்களுக்கு 'கையோடு' துரித மீள்நோக்குச் சேவை அளிப்பதே அதன் நோக்கம். கையோடு அனுமதிப் பத்திரம் அளிப்பதே எங்கள் இலக்கு. சில வேளைகளில், ஒரு மீள்நோக்கைப் பூர்த்திசெய்வதற்கு, 5 நாட்கள் வரை செல்லக்கூடும்.

**கட்டட அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு எவ்வளவு செலவாகும்?**
கட்டட அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு ஆகும் செலவவு, உங்கள் உத்தேச கட்டுமான வகையைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாக, ஒரு தனி வீட்டைப் பொறுத்தவரை ஒரு சதுர மீற்றர் தரைக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம்: $14.46.

**எனக்கு கட்டட அனுமதிப் பத்திரம் எப்பொழுது தேவைப்படும்?**
நீங்கள் பின்வரும் அலுவல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டால், உங்களுக்கொரு கட்டட அனுமதிப் பத்திரம் தேவை:

- புதிய கட்டடம் அமைத்தல்
- தற்போதைய கட்டடத்தைப் புனரமைத்தல், பழுதுபார்த்தல், அருகமைத்தல்
- கட்டடம் முழுவதையும் அல்லது ஒரு பாகத்தை இடித்தல் அல்லது அகற்றல்
- கட்டடத்தின் பாவனையை மாற்றல்
- அடைப்புகள், சுமைதாங்கு சுவர்கள் அமைத்தல், மாற்றல், அகற்றல்.
- கதவுகள், சாளரங்களுக்கு இடம் எடுத்தல், அவற்றின் பருப்பத்தை மாற்றல்
- ஊர்திக்கூடம், மாடிமுகப்பு, அட்டாலை அமைத்தல்
- கீழ்த்தளம் அகழ்தல் அல்லது அத்திவாரம் அமைத்தல்
- வெப்பமூட்டி, குழாய்வகை, குளிரூட்டி வகைகள் பொருத்தல் மாற்றல்
- புகைபோக்கி, கணப்பு வகைகள் பொருத்தல் அல்லது சீரமைத்தல்

இவற்றுள் பலவற்றைப் பொறுத்தவரை, உங்கள் சார்பாக உங்கள் வடிவமைப்பாளரே அல்லது ஒப்பந்தியே பத்திரங்களைப் பெற்றுக்கொள்வார். எனினும், கட்டடத்தின் சொந்தக்காரர் என்ற வகையில் கட்டட அனுமதிப்பத்திர விதிகளுக்கு அமைந்தொழுக வேண்டிய இறுதிப் பொறுப்பு உங்களுடையதே.

ரொறன்ரோ-ஈஸ்ட் யோர்க் மாவட்டம்
Toronto City Hall
100 Queen St. W.
416-392-7539

நோர்த் யோர்க் மாவட்டம்
North York Civic Centre
5100 Yonge St.
416-395-7000

எற்றொபிக்கோ யோர்க் மாவட்டம்
Etobicoke Civic Centre
2 Civic Centre Ct.
416-394-8002

ஸ்காபறோ மாவட்டம்
Scarborough Civic Centre
150 Borough Dr.
416-396-7526

toronto.ca/building

**கைத்துப்பாக்கித் தடை பற்றிய புதிய விபரம்**

கனடா முழுவதும் கைத்தப்பாக்கித் தடை கோரி இணைய வாயிலாக மனுச் செய்தவர்களின் எண்ணிக்கை மார்ச் 31ம் திகதி 71,522 ஆனது.

**அனைவரும் அறியவேண்டியவை**
**ஆயத்தம்…அனைவருக்கும் உரிய அலுவல்**

அவசரத்தில் திட்டமிட முடியாது. ஆனால் ஓர் அவசரம் நேரும்பொழுது நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை எங்களால் திட்டமிட முடியும். அத்தகைய அவசர வேளைகளுக்கு ஆயத்தம் செய்வது குறித்து மாநகர அவசர திட்டமிடுநர்களுடன் மாநகர அவசர சேவைத் துறை நெருங்கிச் செயற்பட்டு வருகிறது. ஓர் அவசர வேளையில் மாநகர வாசிகளுக்கு உதவ மாநகரம் தயாராக இருக்கிறது. அதேவேளை மாநகர வாசிகளும் முன்கூட்டியே ஆயத்தம் செய்து தமக்குத் தாமே உதவ வேண்டும்.

தற்போதுள்ள ஆபத்து ஒன்றின் விளைவாக ஓர் அவசரநிலை தோன்றலாம். அல்லது ஏற்படப்போகும் ஆபத்தினால் மக்களின் உடைமையும். உடல்நலமும், பாதுகாப்பும், சேமமும் கெடலாம். காலநிலை கெடப்போகிறது என்று சிலவேளைகளில் எங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படலாம். அதற்கு ஆயத்தம் செய்வதற்கு அப்பொழுது எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். எனினும், அவசரநிலைகள் பெரிதும் சொல்லிக்கொண்டு வருவதில்லை.

கடுங்காலநிலை, வெள்ளம், பனிப்புயல் போன்ற இயற்கை இடர்கள் முதல் பெருந் தீவிபத்துகள், எங்கள் வழமையான வாழ்வில் குறுக்கிடும் பெரும் நிகழ்வுகள் வரை நேரக்கூடிய ஆபத்துகளை ரொறன்ரோ மாநகரம் எதிர்நோக்கியுள்ளது. கடந்த கோடையில் இம்மாநகரத்தில் இரு பெரிய தீவிபத்துகள் இடம்பெற்றன. அதனால் குடிமக்கள் தமது வீடுகளிலிருந்து நீண்ட காலப்பகுதிக்கு வெளியேற நேர்ந்தது.

ஓர் அவசர நிலைமைக்கு ஆயத்தம் செய்வதில் ஓர் அடிப்படைத் திட்டத்தை வகுத்து வைப்பது நல்லது.

கொஞ்ச நேரத்தை ஒதுக்கி, இவ்விபரங்களை மீள்நோக்கி, ஆயத்தமாய் இருக்கவும்.

**உங்களைப் பாதுகாக்கவும்**
**வீட்டு உடைமையாளர்களுக்கும், வாடகைக்கு குடியிருப்பவர்களுக்கும்**
**காப்புறுதி வேண்டும்**

பெருந் தீவிபத்து, வெடிவிபத்துகளின் பொழுது சேதமடையும் உடைமைகளை மாற்றுவதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு வீட்டுக் காப்புறுதி உங்களுக்குத் துணைநின்று, உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாக்க வல்லது. உங்கள் வீட்டினுள் அல்லது கீழ்த்தளக் கூடத்துள் மீளும் கழிகால் நீரினால் விளையும் சேதத்தை ஈடுசெய்வதற்கு உங்கள் வீட்டுக் காப்புறுதியில் நீங்கள் ஏற்பாடு செய்திருந்தால், அவ்வாறு நீங்கள் ஈடுசெய்து கொள்ளலாம். உங்கள் வீடு அல்லது வதிகூடம் சேதப்பட்டு, அது பழுதுபார்க்கப்படும் பொழுது நீங்கள் அதனை விட்டு வெளியேற நேர்ந்தால், நீங்கள் வேறோர் இடத்தில் தங்குவதற்கான மேலதிக செலவையும் உங்கள் காப்புறுதி கொண்டு ஈடுசெய்யலாம்.

அவசர நிலைமைகளின் பொழுது மாநகரம் பதில்நடவடிக்கை எடுத்து வருகிறது. தீ, வெள்ளம் போன்று உயிரையும் உடைமையையும் அச்சுறுத்தும் உடனடி ஆபத்துகளை எதிர்கொண்டு, அவசர மருத்துவ பராமரிப்புக்கு ஏற்பாடுசெய்து, வெளியேறும் நடைமுறைகள் குறித்து குடிமக்களுக்கு அறிவுறுத்தி, அவர்கள் வெளியேறுவதற்கும், அவசர தற்காலிக உறைவிட வசதி கண்டறிவதற்கும் அது துணைநின்று வருகிறது. உங்கள் சொந்த உடைமைகளை மாற்றுவதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கான செலவை மாநகரம் செலுத்துவதில்லை. வீடு பழுதுபார்க்கப்படும்பொழுது அல்லது மீண்டும் கட்டப்படும்பொழுது நெடுங்கால இடவசதியையும் மாநகரம் வழங்குவதில்லை.

உங்களுக்கு எவ்வளவு காப்புறுதி தேவை என்பதைப் புரிந்துகொள்வதே, உங்களுக்கு உகந்த காப்புறுதியைக் கண்டறிவதில் முதற் படி. உங்கள் சொந்த உடைமை விபரங்களை அறிவதற்கு உதவும்பொருட்டு, கனடா காப்புறுதிப் பணியகம் *Know Your Stuff* எனப்படும் இலவச வீட்டு உடைமைப் பட்டியல் மென்பொருளை வழங்கி வருகிறது. உங்கள் இலவச பிரதிக்கு நாடவும்: www.ibc.ca

வீட்டு உடைமையாளர்களுக்கும், வாடகைக்கு குடியிருப்பவர்களுக்கும் வெவ்வேறு காப்புறுதிகள் பலவும் கிடைக்கும். உங்கள் தேவைகள் பற்றி ஒரு காப்புறுதித் துறைஞருடன் தவறாது கலந்துரையாடவும்.

**எல்லாம் திட்டமிடுவதிலேயே தங்கியுள்ளது: உங்கள் அவசரகால அணியப் பெட்டி**
ஓர் அவசரம் அல்லது பேரழிவு குறித்து அனைவரும் ஒரு திட்டத்தை வகுத்து வைத்திருக்க வேண்டும். ஆகக் குறைந்தது உங்களிடம் ஓர் அவசர அணியப் பெட்டி இருக்க வேண்டும். 72 மணித்தியாலங்களுக்குப் போதிய உணவு, நீர், பொருள்வகைகள் அதற்குள் இருக்க வேண்டும். அவசர வேளையில் உங்கள் சொந்தத் தேவைகளையும், உங்கள் குடும்பத்தின் தேவைகளையும் நீங்கள் நிறைவேற்ற நேரலாம் என்பதை உள்ளத்தில் பதிக்கவும்.

தெருவில் கெடுதிவாய்ந்த இரசாயனவகைகள் வழிந்தோடினால், அல்லது எரிவாயு கசிந்தால், உடனடியாக வெளியேற நேரும் அல்லது மணித்தியாலக் கணக்காகத் தவிக்க நேரும் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும். ஒரு பனிப் புயலினால் உங்கள் குடும்பம் வீட்டில் அடைபட நேரலாம் அல்லது வீடுதிரும்ப முடியாது போகலாம். வெள்ளம் அல்லது தீ அல்லது மின்தடையினால் எரிவாயு, நீர், மின்வலு, தொலைபேசி போன்ற அடிப்படைச் சேவைகள் துண்டிக்கப்படலாம். சில வேளைகளில் அத்தகைய துண்டிப்புகள் குறுகிய வேளைக்கே நீடிக்கக்கூடும். எனினும் நீடித்த துண்டிப்புகளுக்கு நீங்கள் தயாராய் இருப்பது முக்கியம்.

ஓர் அவசர அணியப் பெட்டியை ஆயத்தப்படுத்தி வைத்திருப்பதும் முக்கியம், அது வைக்கப்பட்டுள்ள இடத்தை உங்கள் குடும்பத்தவர் அனைவரும் அறிந்திருப்பதும் முக்கியம்.

உங்களுக்கு ஆகக் குறைந்தது 3 நாட்களுக்கு வேண்டிய நீரையும், பழுதடையாத உணவு வகைகளையும் வைத்திருக்கவும். உணவு வகைகளை ஒழுங்காகச் செவ்வைபார்க்கவும். ஆண்டுதோறும் நீரை மாற்றவும்.

**கருத்தில் கொள்ளவேண்டிய பிற விடயங்கள்:**

- அடிப்படைப் பொருள்வகைகள், கருவிகள், முதலுதவிப் பெட்டி, உடைவகைகள்
- குழந்தைகள், வயதுவந்தவர்கள், முதியோர்க்கு விசேடமாக வேண்டிய பொருள்வகைகளைப் பற்றிச் சிந்திக்கவும்
- உங்கள் முக்கிய ஆவணங்கள் – காப்புறுதி ஆவணங்கள், உடைமை ஆவணங்கள், மருந்துக் குறிப்புகள் – என்பவற்றுக்குப் பிரதி எடுத்து வைத்திருக்கவும்.
- ஆகக் குறைந்தது ஒரு கிழமைக்குப் போதிய மருந்துவகைகளை உங்கள் அவசர அணியப் பெட்டியில் வைத்திருக்கவும்

**முக்கிய ஆயவணங்கள்:**

-வங்கிக் கணக்கு இலக்கங்கள், உயில்கள், காப்புறுதி ஆவணங்கள்

-கடன் அட்டைக் கணக்கு இலக்கங்கள், நிறுவனங்கள்

-சுகாதார அட்டை, சமூகக் காப்புறுதி இலக்கம்

-கடவுச்சீட்டுகள், தடுப்பூசிப் பதிவுகள்

-குடும்பப் பதிவேடுகள்: பிறப்பு, திருமண, இறப்புச் சான்றிதழ்கள் போன்றவை

-முக்கிய தொலைபேசி இலக்கங்கள்

-பெறுமதிவாய்ந்த வீட்டுப் பொருட்களின் பட்டியல்

-குடும்பத்தவர்களின் ஒளிப்படங்கள். நீங்கள் வெவ்வேறு இடங்களைச் சென்றடைய நேரலாம்

-உங்கள் முக்கிய ஆவணங்களின் பிரதிகளை நீர் கசியாத ஒரு கலத்தில் இட்டுவைக்கவும

-மேலதிக சாவிகள், காசு கொஞ்சம், காசோலைக் கட்டு

**உணவு, நீர்:**

-தலைக்கு, ஒரு நாளுக்கு ஆகக் குறைந்தது மூன்று லீட்டர் போத்தில் நீர்

-பேணி உணவு: கூழுணவு, வதக்கிய உணவு, அவரை உணவு, பஸ்டா, இறைச்சி, மீன், காய், கனி வகைகள்

-வலு உணவுக் கூறுகள், உலர் உணவு வகைகள்

-தேன், நிலக்கடலை பட்டர், இன்தேறல், பழப்பாகு, கடலை வகைகள், உப்பு, மிளகு, சீனி, உடன் காப்பி, தேநீர்

-உளவழுத்தம் தணித்து தெம்பூட்டும் விசுக்கோத்து, இனிப்பு வகைகள்

-குழந்தைகள், முதியோர், விசேட உணவு வகைகள் உட்கொள்பவர்களுக்கான உணவு

**மருந்துவகைகள்:**

-உங்கள் மருந்துக் குறிப்புகள் அனைத்துக்கும் பிரதி எடுத்து வைத்திருக்கவும். ஆகக் குறைந்தது ஒரு கிழமைக்குப் போதிய மருந்துவகைகளை உங்கள் அவசர அணியப் பெட்டியில் வைத்திருக்கவும்.

**நீங்கள் கட்புலன், செவிப்புலன் குன்றியவர், விசேட மருத்துவ வசதிகள் அல்லது சொந்தப் பணிவிடையாளர் தேவைப்படுபவர், உயிர்-காப்பு உபகரணங்கள் பயன்படுத்துபவர் என்றால்:**

- உங்களைச் செவ்வைபார்ப்பதற்கு முன்கூட்டியே ஒருவரை ஒழுங்குசெய்து வைத்திருக்கவும்
- மருத்துவ எச்சரிக்கை காப்பு ஒன்றை அணியவும் அல்லது ஓர் அடையாள அட்டையை வைத்திருக்கவும்
- நீங்கள் இருக்கும் இடத்தை அறிவிக்கக்கூடிய உங்கள் சொந்த எச்சரிக்கை ஒரி எழுப்பி ஒன்றை வைத்திருக்கவும்
- உங்கள் உபகரணங்களுக்கு விபரம் பொறித்து, அறிவுறுத்துரைகளை இணைக்கவும்
- உங்கள் அவசர அணியப் பெட்டியில் மருந்துவகைகள். பொருள்வகைகள், விசேட உபகரணங்கள், உங்களுக்கு விசேடமாக வேண்டிய பொருள்வகைகள், உணவுவகைகள் பற்றிய விபரங்களை வைத்திருக்கவும்

ஓர் அவசர நிலைமையில் உடனுக்குடன் மாநகரத்திடம் மின்னஞ்சல் மூலம் அவசர எச்சரிக்கை-தகவல் பெறுவதற்கு toronto.ca/e-updates இணையத்தளத்தில் பதிவுசெய்யவும். உங்கள் மின்னஞ்சல் வரி அந்தரங்கமாக வைக்கப்படும். Twitter மூலம் 'TorontoComms' என்பதை வழியொற்றிச் செல்லவும். பதிவுசெய்வோர் அனைவருக்கும் அவசர நிலைமையில் அறிவிப்புகள் அனுப்பப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**றொறன்ரோ மாநகர இணையத்தளம்:** toronto.ca

**அவசர முகாமை அலுவலகம்:** toronto.ca/oem
**கனடா காலநிலை எச்சரிக்கைகள்:** weatheroffice.gc.ca/warnings/warnings_e.html

**அவசரமற்ற சேவை தொலைபேசி இலக்கங்கள்:**
**தீ:** 416-338-9050
**காவல்துறை:** 416-808-2222
**Toronto Hydro பயனாளர் தகவல்:** 416-542-8000

**அவசர நிலைமையில் செய்யவேண்டியவையும் செய்யக்கூடாதவையும்**

வானொலி **கேட்டபடி,** தொலைக்காட்சி **பார்த்தபடி இருக்கவும்.**
அவசரசேவை அதிகாரிகளின் **அறிவுறுத்துரைகளைப் பின்பற்றவும்.** எடுத்துக்காட்டாக, வெளியேறுமாறு கேட்கப்பட்டால், உங்கள் சொந்த பாதுகாப்பே மிகவும் முக்கியம் என்பதை உள்ளத்தில் பதிக்கவும்.
உங்கள் குடும்பத்தவர்களைத் **தொலைபேசியில் அழைக்கவும்.** நீங்கள் இருக்கும் இடத்தையும், நீங்கள் பத்திரமாக இருப்பதையும் தெரிவிக்கவும்.
ஒருவரை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டியுள்ளது, ஆனால் உங்களால் அவரை அப்புறப்படுத்த முடியாமல் உள்ளது என்றால், **தொலைபேசி மூலம் உதவி நாடி அழைக்கவும்.**
வேறு மாதிரி அறிவுறுத்தப்பட்டாலொழிய, உங்கள் **வீட்டின் உள்ளேயே இருக்கவும்.**
இயன்றவிடத்து, உங்களுக்கு ஆபத்து ஏற்படாவாறு, உங்கள் அண்டை **அயலவர்கள் பத்திரமாக இருக்கும்படி பார்க்க முயலவும்.**
உங்கள் **செல்பேசி பற்றெரி மின்னூட்டியை அருகில் வைத்திருக்கவும்.** இயன்ற வேளைகளில் மீளமின்னூட்டவும்.

**தொலைபேசியில் தொடர்ந்து உரையாட வேண்டாம்.** அவசரசேவை அதிகாரிகள் அலுவல் பார்ப்பதற்கு தொலைபேசி மார்க்கங்கள் தேவை.
அவசரசேவை அதிகாரிகள் அறிவுறுத்தினாலொழிய, **வெளியே செல்ல வேண்டாம்.** உள்ளேயே இருக்கவும். உள்ளே வெதவெதப்பாக இருக்கும். உள்ளே பொருள்வகைகளும் உண்டு.
ஓர் அவசர நிலைமையில் அல்லது வெளியேறும் நிலைமையில், பாடசாலையிலிருந்து அல்லது பாலர் பராமரிப்பகத்திலிருந்து உங்கள் **பிள்ளைகளை வீட்டுக்கு கூட்டிவர முயல வேண்டாம்.** அவசர நிலைமைகள் பாடசாலை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படும். தங்கள் வசமுள்ள பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு அவர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். நீங்கள் எப்பொழுது உங்கள் பிள்ளைகளுடன் சென்று சேர்ந்து கொள்ளலாம் என்பது உங்களுக்கு அறிவிக்கப்படும்.

**மின்சாரம் தடைப்படும் வேளைகளில் உதவும் குறிப்புகள்**

Toronto Hydro-Electric System Limited அதன் மின்சார உபகரணங்களை ஊக்கமுடன் பேணி, தரமுயர்த்தி வருகிறது. எனினும், ரொறன்ரோ மாநகர மின்சார விநியோகத்தில் அவ்வப்பொழுது மின்சாரம் தடைப்படுவதைத் தவிர்க்கவியலாது. எவ்வாறாயினும், மின்சாரம் தடைப்பட முன்னரும், தடைப்படும் பொழுதும், அந்த நிலைமையின் தாக்கத்தைத் தணிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம்.

மின்சாரம் தடைப்பட முன்னர்:

- கைமின்விளக்கு, கைவானொலிப் பெட்டி, பற்றெரியில் இயங்கும் மணிக்கூடு, பற்றெரிகள், தீப்பெட்டி, மெழுகுதிரி, தண்ணீர்ப் புட்டிகள், ஆக்கிய உணவு வகைகளுடன் கூடிய அவசர அணியப்பெட்டி ஒன்றை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கவும்;
- செல்பேசி அல்லது தனிக் கம்பியிணைப்புத் தொலைபேசி ஒன்றைத் தவறாது வைத்திருக்கவும். கம்பியிணைப்பற்ற தொலைபேசி மின்சாரமின்றி இயங்காது;
- Toronto Hydro-Electric System-க்குரிய (416-542-8000) மின்தடை இலக்கத்தை அவசரசேவை இலக்கங்களுடன் சேர்த்து உங்கள் தொலைபேசி அருகே வைத்திருக்கவும்.

மின்சாரம் தடைப்படும்பொழுது:

- மேற்கொண்டு விபரம் அறிவதற்கு வானொலி கேட்கவும். உள்வீடு மிகவும் குளிர்ந்தால், வெப்ப வசதி கொண்ட இடத்துக்குச் செல்லவும்.
- உறைபதனியைத் திறக்க வேண்டாம். உறைபதனி திறக்கப்படாவிட்டால், அதற்குள் இருக்கும் உணவுவகைகள் இரண்டு நாட்கள்வரை உறைந்திருக்கும். அவை இளகியதும், மீண்டும் உறைய முன்னர் அவற்றைச் சமைக்கவும். குளிர்பதனியில் உள்ள உணவுவகைகள் எட்டு மணித்தியாலங்கள் வரை நீடிக்க வல்லவை. ஐயம் எழுந்தால், கழிக்கவும்!

- மின்சாரம் தடைப்படும் வேளைகளில் இயங்கிய மின்விளக்குகளை அல்லது உபகரணங்களை நிறுத்தி, மின்சாரம் மீளும்பொழுது அவை சேதமடையும் வாய்ப்பைத் தவிர்க்கவும். மின்ம, மோட்டாரியக்க உபகரணங்களுக்கும் இது பொருந்தும்.

மின்சாரம் தடைப்படல் பற்றிய மேலதிக விபரங்களுக்கு எமது இணையத்தளத்தை நாடவும்: http://www.torontohydro.com/poweroutage

**நீர்க் குழாய்கள் உறைவதையும் வெடிப்பதையும் தவிர்க்கவும்**

உங்கள் வீட்டைப் பரிசோதிப்பதற்கு வசந்தகாலமும், கோடைகாலமும் சிறந்தவை. அடுத்துவரும் குளிர்காலத்தை எதிர்கொள்ளும் வண்ணம் உங்கள் வீட்டைத் தயாராக்கத் தவற வேண்டாம். மின்சாரம் நெடுநேரம் தடைப்பட்டால், உங்கள் உள்வீட்டு வெப்பம் உறைநிலையின் கீழே குறையக்கூடும். உங்கள் புறச்சுவர்களின் அருகேயுள்ள குழாய்கள் தகுந்த காப்புறை அற்றவை என்றால், அவை உறையவோ வெடிக்கவோ கூடும். உங்கள் புறச்சுவர்களின் ஓரமாகக் குழாய்கள் அமைந்திருப்பது உங்களுக்குத் தெரியவந்தால், குளிர்காலம் மீளமுன்னர் திருத்தம் செய்விக்கவும். மின்சாரம் நெடுநேரம் தடைப்பட்டால், குழாய்கள் உறைவதைத் தவிர்ப்பதற்கு, உங்கள் வீட்டின் உச்ச மட்டத்தில் ஒரு குழாய் முனையையும், அடிமட்டத்தில் ஒரு குழாய் முனையையும் திறந்துவிடவும் - மிகவும் குறைந்த வேகத்தில் நீர் பாய விடவும் - உங்கள் குழாய்கள் உறைவதை அது தடுக்கும்.

toronto.ca/fire/prevention/frozen_water_pipes.htm

**உள்ளத்தில் பதிக்கவும்**

அவசர வேளையில் நிலைமைகள் மாறக்கூடும். அவசரநிலை தோன்றிய இடத்தில் காணப்படும் நிலைமைகள் பெரிதும் ஒரு கணப்பொழுதில் மாறக்கூடும். அவசரநிலை குறித்துப் பதில்நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளுக்கு கிடைக்கும் விபரங்களும், அவசர சூழ்நிலையைப் பொறுத்து, மாறக்கூடும். அனைவரும் பத்திரமாக இருக்க உதவுவதற்கே மாநகரம் விரும்புகிறது. அதற்காக, சிலவேளை நீங்கள் வீட்டில் இருக்க முடியாது போகலாம். குடிமக்கள் தமது இடத்துக்கு மீள்வதற்கு ஏதுவாக அதனைப் பத்திரமான இடமாக்கும்வரை, அவர்கள் புரிந்துணர்வுடன் பொறுமை காப்பது மெச்சத்தக்கதாகும்.

பாதுகாப்புக்கு அனைவரும் பொறுப்பு.
ரொறன்ரோ மாநகர அவசரசேவை அதிகாரிகள் பணித்தவாறு செயற்படவும்.

அவசர நிலைமையைலிருந்து மீளக் காலம் எடுக்கும். அவசர நிலைமையில் தமக்கு நேர்ந்த சூழ்நிலையைக் கையாள்வதில் சிலருக்கு விசேட உதவி தேவைப்படும். தமது வீடுகள் பழுதுபார்க்கப்படும் வரை அல்லது மீண்டும் கட்டப்படும் வரை வேறு சிலர் நீண்ட காலத்துக்கு வெளியே தங்கியிருக்க நேரலாம். அதாவது, மீட்சி ஏற்படுவதற்கு ஒரு காலப்பகுதியை நாங்கள் ஒதுக்க வேண்டும் – அது கணப்பொழுதில் ஏற்படல் அரிது. குடிமக்கள் அவசரநிலையிலிருந்து மீள்வதற்கு, பல்வேறு முகமையகங்களும் இயைந்து உதவ வேண்டும். அவசரநிலை தோன்றிய பின்னர் மீட்சி முயற்சிகள் முக்கியமானவை. அவை முற்றிலும் இயைபுபடுவதற்கு நேரம் எடுக்கும். நல்ல அயலவர்கள் போன்று ஒருவருக்கொருவர் இயன்றவரை கைகொடுத்து உதவுவது, மீட்சி எளிதில் கைகூடுவதற்குச் சிறந்த முறையாகும். காலப்போக்கில் மீட்சி கைகூடுவதற்கு மாநகரமும் சமூகத்துடன் ஒத்துழைக்க முடியும்.

toronto.ca/oem

**புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகளைப் பொருத்திப் பேண வேண்டும் என்பது சட்டம்!**

மக்கள் இரவில், உறங்கும் வேளையில், தீவிபத்துக்கு உள்ளாகி இறப்பது அதிகம். அவர்கள் விழிக்காமலேயே இறப்பதும் அதிகம். செயற்படும் புகை எச்சரிக்கை ஒலி எழுப்பி எதுவும் புகையை உற்றறிந்து, ஒலி எழுப்பி, உங்களை எச்சரித்து, நீங்கள் தப்புவதற்கு அரிய தருணத்தை அளிக்கும். ஒன்ராறியோ தீவிபத்து விதிக்கோவையின்படி உங்கள் வீட்டு அடுக்கு

ஒவ்வொன்றிலும், உறங்கும் பகுதிகளின் வெளிப்புறங்களிலும் புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

**வீட்டுச் சொந்தக்காரர்:**
தத்தம் வீட்டு அடுக்கு ஒவ்வொன்றிலும், உறங்கும் பகுதிகளின் வெளிப்புறங்களிலும் புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகளைப் பொருத்தி, பேணுவது வீட்டுச் சொந்தக்காரரின் பொறுப்பு.

**வீட்டு உடைமையாளர்:**
தாம் வாடகைக்கு கொடுக்கும் வளவுகளில் சட்டப்படியான ஏற்பாடுகளைச் செய்விப்பது உடைமையாளரின் பொறுப்பு.

**குடியிருப்பாளர்:**
நீங்கள் வாடகைக்கு குடியிருப்பவர் என்றால், உங்களிடம் வேண்டியளவு புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகள் இல்லை என்றால், உடன் உங்கள் உடைமையாளருடன் தொடர்புகொள்ளவும். புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகளின் பற்றெரிகளை அகற்றுவது அல்லது அதில் கைவைப்பது சட்டவிரோதம்.

**நினைவில் பதிக்கவும்:**

- உங்கள் வீட்டு அடுக்கு ஒவ்வொன்றின் உள்முகட்டிலும், உறங்கும் பகுதிகளின் வெளிப்புறங்களிலும் புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகளைப் பொருத்தவும்.
- உங்கள் புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகளின் குமிழை அழுத்தி, அவற்றை ஒழுங்காகப் பரீட்சித்துப் பார்க்கவும்.
- ஆண்டுக்கொரு தடவையாவது உங்கள் புகை எச்சரிக்கை ஒலி எழுப்பி ஒவ்வொன்றின் பற்றெரியையும் மாற்றவும்.
- புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகள் என்றென்றும் நீடித்துச் செயற்படுபவை அல்ல. 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகளை மாற்றவும்.

**புகை எச்சரிக்கை ஒலி எழுப்பிகளைப் பொருத்தி, பரிசோதித்து, பேணும் வேளைகளில் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளரின் அறிவுறுத்துரைகளைத் தவறாது பின்பற்றவும்.**

toronto.ca/fire/prevention/smoke_alarms.htm

கார்பன் மொனொக்சைட் (Carbon monoxide = CO) நிறமோ, மணமோ, சுவையோ அற்றது. அது பெரிதும் <u>ஓசை எழுப்பாது கொல்லும்</u> என்று சொல்லப்படுகிறது.

உங்கள் விட்டில் **கார்பன் மொனொக்சைட் ஆபத்துகளைத் தடுக்கவும்**

- தகைமைபெற்ற வெப்பமூட்டி ஒப்பந்தி ஒருவரைக் கொண்டு ஆண்டுதோறும் உங்கள் உலை, துவாரங்கள், கணப்புகள், புகைபோக்கிகள், எரிபொருள் சாதனங்களை செவ்வை பார்ப்பிக்கவும்.
- கனடிய நியம அவையத்தின் 'நீலத் தீக்கொழுந்து,' மற்றும் குறிப்பு இலக்கம் CSA 6.19-01 பொறித்த கார்பன் மொனொக்சைட் எச்சரிக்கை ஒலி எழுப்பியைப் பொருத்தவும். ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமையவே அந்த எச்சரிக்கை ஒலி எழுப்பி உருவாக்கப்பட்டுள்ளது என்பதைப் புத்தம்புதிய இக்கனடிய நியமம் உங்களுக்குச் சுட்டிக்காட்டும்.
- படுக்கை அறை ஒவ்வொன்றுக்கும் அருகில் முழங்கால் உயரத்தில் ஆகக் குறைந்தது ஒரு கார்பன் மொனொக்சைட் எச்சரிக்கை ஒலி எழுப்பியைப் பொருத்தவும். உங்கள் வீட்டில் வெவ்வேறு மட்டங்களில் உள்ள படுக்கைப் பகுதிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கார்பன் மொனொக்சைட் எச்சரிக்கை ஒலி எழுப்பிகளைப் பயன்படுத்தவும்.

**கார்பன் மொனொக்சைட் எச்சரிக்கை ஒலி எழுப்பிகளைப் பொருத்துவதிலும், பேணுவதிலும் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளரின் அறிவுறுத்துரைகளைப்** பின்பற்றத் தவறவேண்டாம்.

மாநகர உபவிதியின்படி கார்பன் மொனொக்சைட் எச்சரிக்கை ஒலி எழுப்பிகள் பொருத்தப்பட வேண்டும்:

**பின்வரும் வசிப்பிடக் கூறுகளில் ஆகக் குறைந்தது ஒரு கார்பன் மொனொக்சைட் எச்சரிக்கை ஒலி எழுப்பி பொருத்தப்பட வேண்டும்:**

அ. எரிபொருள் சாதனம் உள்ள இடம் ஒவ்வொன்றிலும் (எ-கா: உலை, கணப்பு, விறகு-அடுப்பு)

ஆ. பற்பல வதிகூடங்கள் கொண்ட கட்டடத்தைப் பொறுத்தவரை, எரிபொருட் சாதனம் பொருத்தப்பட்டுள்ள அதே மாடியில் உள்ள வதிகூடம் ஒவ்வொன்றிலும்

இ. பற்பல வதிகூடங்கள் கொண்ட கட்டடத்தைப் பொறுத்தவரை, எரிபொருட் சாதனம் பொருத்தப்பட்டுள்ள மாடிக்கு மேலே முதலாவது, இரண்டாவது மாடிகளில் உள்ள வதிகூடங்கள் ஒவ்வொன்றிலும்

உங்களிடம் எரிபொருட் சாதனங்கள் இருந்தால், கார்பன் மொனொக்சைட் எச்சரிக்கை ஒலி எழுப்பிகள் அத்தியாவசியம்.

toronto.ca/fire/prevention/carbon.htm

**வேலைவாய்ப்பு, சமூக சேவைகள் குறித்த புதிய அணுகுமுறை**

ரொறன்ரோ வேலைவாய்ப்பு, சமூக சேவைகள் பகுதி சுறுசுறுப்பாக இயங்கிய ஆண்டின் முடிவை 2008 நவம்பர் மாதம் குறித்து நிற்கிறது. தன் பெயரை அது மாற்றியது. ஓர் அடிப்படை அறிக்கையை வெளியிட்டது. புதிய இணையத்தளம் ஒன்றை அமைத்தது. இணையமூல விண்ணப்ப வசதியை ஏற்படுத்தியது.

ரொறன்ரோவில் புதிய அணுகுமுறை கொண்டு வேலைவாய்ப்பு, சமூக சேவைகள் மேற்கொள்ளப்படத் தொடங்கியதை இம்மாற்றங்கள் குறித்து நிற்கின்றன.

"முதலாவதாக, நாங்கள் ஆற்றும் பணியை எங்கள் பெயர் புலப்படுத்துவதாக நாங்கள் கருதுகிறோம். எவ்வாறாயினும், ரொறன்ரோ வாசிகள் தத்தம் குறிச்சிகளில் சமூக, பொருளாதார நலம்பெற்று மேற்கொள்ளும் வாழ்வை வலுப்படுத்துவதில் எங்கள் வேலைவாய்ப்புச் சேவைகள் பெரும் பங்கு வகிக்கின்றன," என்று, முன்னர் ரொறன்ரோ சமூக சேவைகள் பகுதி எனப்பட்ட பகுதியின் பொது முகாமையாளர் Heather MacVicar கூறுகிறார்.

பெயர் மாற்றத்தை அறிவிப்பதற்கும், ரொறன்ரோ வேலைவாய்ப்பு, சமூக சேவைகள் பகுதியின் ஆகப்பிந்திய அறிக்கையான *சரியான இடத்தில் தொடங்குதல்* (*Starting in the Right Place*) என்பதை வெளியிடுவதற்குமென நவம்பர் மாதம் ஊடகர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

"ரொறன்ரோ வாசிகளின் தேவைகளைுக்கு ஈடுகொடுத்து, தடங்கல்களைக் களைந்து, மேம்படும் வாய்ப்புகளைத் தோற்றுவித்து" சேவையாற்றும் முறைமை ஒன்று அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது. *சரியான இடத்தில் தொடங்குதல்* என்பது சேவை பெறுவோரை மையப்படுத்தி, சமூகத்தைக் கருத்தில் கொண்டு சேவையாற்றும் முறைமையை — தொழிலதிபர்களை மும்முரமாக ஈடுபடுத்தும் முறைமையைப் பயன்படுத்துவதற்குப் பற்பல வழிகளை மாநகர வாசிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதாகும்" என்று மாநகராதிபதி டேவிட் மிலர் அந்த ஊடகர் மாநாட்டில் தெரிவித்தார்.

ரொறன்ரோ வேலைவாய்ப்பு, சமூக சேவைகள் பகுதியின் மீட்டியமைத்த இணையத்தளத்தில் இந்த அறிக்கையைக் காணலாம்: toronto.ca/socialservices. சேவைகளைப் பயன்படுத்துவோர், சமூக முகமையகங்கள் ஆகிய இரு தரப்புகளுடனும் கலந்துசாவியே இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டது. நாங்கள் முன்வைக்கும் பல்வேறு நிகழ்வுத்திட்டங்கள், சேவைகள் பற்றிய விபரங்களை ரொறன்ரோ வாசிகள் விரைவாகவும், இலகுவாகவும் பெற்றுக்கொள்வதற்கு அது வழிவகுத்துள்ளது. ரொறன்ரோ வாசிகள் அதனை அடிக்கடி நாடி எதிர்வரும் வேலைவாய்ப்பு நிகழ்வுகள், பட்டறைகள் பற்றி அறியலாம். இணையமூல வேலைவாய்ப்பு விபரங்களுக்கான இணைப்புகளையும் அது கொண்டுள்ளது. தொழிலதிபர்களும் இந்த இணையத்தளத்தை நாடி, தமக்குத் தேவைப்படும் பணியாளர்களை அமர்த்துவதற்கு வேண்டிய உதவிகளைப் பெற்று நன்மை அடையலாம்.

முதன்முதல் சமூகநல உதவிக்கான இணையமூல விண்ணப்பத்தை முற்றிலும் ஒருங்கிணைத்து முன்வைக்கும் கனடிய இணையத்தளமாகவும் அது விளங்குகிறது. உங்கள் சேவைகளுக்கான இணைய வழிவகையை (WAYS) பயன்படுத்தி, சமூகநல உதவி பெறும் தகுதி உங்களுக்கு உண்டா என்பதை நீங்கள் விரைவாகக் கணித்து, இணையமூலம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டள்ளது.

"நாங்கள் செல்லும் திசையைக் குறித்து எங்களுக்கு மிகவும் பூரிப்பாக இருக்கிறது. ரொறன்ரோவை வலுப்படுத்தி, கட்டியெழுப்ப உதவும் வண்ணம் வேலைவாய்ப்பு, நிதிய, சமூக உதவிகளை நாங்கள் வழங்கி வருகிறோம்" என்கிறார் Ms. MacVicar.

toronto.ca/socialservices

**ரொறன்ரோ அன்றும் இன்றும்**

**தெற்கே யோர்க் மில்ஸ் நோக்கிப் பார்க்கையில் யங் வீதி**

1936ல் நோர்த் யோர்க் ஒரு பட்டணமாக விளங்கியபொழுது, யங் வீதி இரு தடங்களை மட்டுமே கொண்டிருந்தது. ரொறன்ரோ போக்குவரத்து ஆணையம் (TTC) யங் வீதியின் மேற்குப் பக்கமாக ஒரு மின்பேருந்துச் சேவையை நடத்தியது. 1973ல் யோர்க் மில்ஸ் வரை சுரங்கத் தொடருந்துச் சேவை நீடிக்கப்பட்டது. யங் வீதியின் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ள (பின்னர் தனியே ஓர் அருந்தகமாக மாறிய) Jolly Miller Hotel பல தலைமுறைகளைச் சேர்ந்த ரொறன்ரோவாசிகளைத் தொடர்ந்து வரவேற்று வருகிறது.

toronto.ca/archives

**றொறன்ரோவில் வதிவகமின்மையை ஒழித்தல்**
**ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருவராக**

2005 முற்கூறு முதல் இற்றைவரை வதிவகமற்ற 2,200க்கு மேற்பட்டோர் நிரந்தர வதிவகம் கண்டடைவதற்கு, றொறன்ரோவில் வகுக்கப்பட்டு, விருதுபெற்ற *தெருவிலிருந்து வதிவகம் சேர்தல்* என்னும் நிகழ்வுத்திட்டம் உதவியுள்ளது. உரிய நடவடிக்கை மேற்கொண்டு பெரிதும் தேவைப்படும் உதவிகள் புரியும் பணியாளர்கள் வதிவகம் சென்று மக்களைச் சந்தித்து செயற்பட்டதன் பயனாக உதவிபெற்ற 91 விழுக்காட்டுக்கு மேற்பட்டவர்கள் இன்னும் தங்கள் வதிவகங்களில் நிலைகொண்டுள்ளனர்.

தங்கள் வாழ்வை வதிவகம் மாற்றியுள்ளதாக, சேவைபெறுவோர் தெரிவிக்கிறார்கள்: அவர்களுக்கு தெம்பு பிறந்துள்ளது. அவர்களுக்கு சிறந்த எதிர்காலம் தென்படுகிறது. தாங்கள் மதுவகை, வேறு போதைப்பொருட்கள் உட்கொள்வது குறைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஒன்பது ஆண்டுகள் தெருவில் வசித்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தனது வதிகூடத்துக்கு மாறிய, *தெருவிலிருந்து வதிவகம் சேர்ந்த,* ஜேம்ஸ், "மேற்கொண்டு நான் கொக்கெயின் போதைப்பொருள் உட்கொள்ளாத காரணம் வதிவகமே. சிறந்த வாழ்வை நோக்கி நான் முன்னேறுவதற்கு அதுவே காரணம்" என்று கூறுகிறார். வாடகை வதிகூடங்களில் வாழ்ந்து, கார்கள் வாங்கி, றையேர்சன் கல்லூரியில் கற்று, "வழமை" வாழ்வு வாழ்ந்து, சித்தப்பிரமையால் தடம்புரண்டு, வதிவகமின்றி, ஆறு ஆண்டுகள் ஓர் இடுக்குவழியில் வாழ்ந்த அந்தோனி அண்மையில் ஓர் உயர்ந்த கட்டடத்து வதிகூடத்துக்கு மாறிய பின்னர் "நான் எவ்வளவு மிருகத்தனமாக வாழ்ந்துவந்தேன் என்பதை இப்பொழுது புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளேன். அங்கே வாழ்ந்தபொழுது கூட எனக்கு மகத்தான குறிக்கோளும் திட்டங்களும் இருந்தன. அப்பொழுது நான் எப்படி முயன்றிருந்தாலும் அவை நிறைவேறா என்பது இப்பொழுது எனக்குப் புரிகிறது. அவற்றை எய்துவதற்கு ஓர் அத்திவாரம் தேவை. வாழ்வதற்கு ஓர் இடம் தேவை" என்று தெரிவித்தார்.

*தெருவிலிருந்து வதிவகம் சேர்தல்* நிகழ்வுத்திட்டப் பணியாளர்கள் ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் தெருக்களில் பாடுபட்டவர்கள். நீங்கள் அன்றாடம் காணக்கூடிய வதிவகமற்றோருள் அநேகமாக அனைவருடனும் அவர்கள் தொடர்புகொண்டமை நன்மையில் முடிந்தது. தெரு, சோலை, இடுக்குவழி எங்கும் படுப்பவர்களுக்கு மட்டுமன்றி, தெருவோரம் வசித்த அனைவருக்கும் கடந்த கோடை முதல் மேற்படி பணியாளர்கள் சேவையாற்ற முன்வந்தார்கள். தற்பொழுது அதிக மாற்றுமுறைகளில் (குளிரிலும் கோடையிலும் அகநகரில் 24 மணித்தியால வெளிக்களப் பணியாளர்கள், மாநகரக் குறிச்சிகள் அனைத்திலும் நடமாட்டப் பணியாளர்கள் உட்பட) தெருக்கள மதிஞர்கள் உட்பட முன்னிலைப் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

"வதிவகம் என்பது நல்மருந்து. இவர்களே எங்கள் மாநகரத்தில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய தரப்பினர்" என்கிறார் வதிவகமற்றோருக்கான சமூகநல வதிவகத் துறை, அவசர காப்பக சேவைகள், மற்றும்பிற சேவைகளுக்குப் பொறுப்பான, காப்பக-உறுதுணை-வதிவக நிர்வாக மாநகரப் பகுதியின் பொது முகாமையாளர் Phil Brown.
toronto.ca/housing

(sidebar)

**ஏப்பிறில் 15-ம் திகதி றொறன்ரோவாழ் தொண்டர்கள் வதிவகமின்மையை ஒழிக்க நடவடிக்கை எடுத்தார்கள்.** ஏப்பிறில் 15-ம் திகதி மாலை 1,000-க்கு மேற்பட்ட தொண்டர்கள் தெருவில் இறங்கி, அவசர காப்பகங்களுக்குச் சென்று, இரண்டாவது தெருவாழ்வு வசதிக் கணிப்பீடு மேற்கொண்டார்கள் - வதிவகமற்றவர்களிடம் 10 வினாக்கள் கேட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். நலிவுக்கு உள்ளாகக்கூடிய தரப்பினருக்கு மாநகர நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் சேவைகளை மேம்படுத்துவதற்கு அது உதவும். "றொறன்ரோவாழ் மக்களுள் பலதரப்பட்டவர்களும், இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள், நலிந்தோர், நம்பிக்கை மிகுந்தோர், அக்கறை கொண்ட அத்தனை பேரும் எமக்காக ஒரு மாலைப்பொழுதை ஈந்தது கண்டு நான வியந்து நின்றேன்" என்றார் ஒரு தொண்டர். மார்ச் மாதம் அவர் தொண்டாற்றியபொழுது அவருடைய சக தொண்டர்களைப் பற்றி தெருவாழ்வு வசதிக் கணிப்பீட்டு முகப்பேட்டுப் பக்கத்தில் இப்படி ஒருவர் எழுதியிருந்தார்: "மாநகரளாவிய ஒரு மாபெரும் மக்கள் குழுமம்... பரந்த இதயத்துடன்,

வதிவகமற்றொரின் மனக்குறைகளையும் தேவைகளையும் காது கொடுத்துக் கேட்டார்கள். ரொறன்ரோவை மேம்படுத்துவதற்கு இது உகந்த வழி!'' இந்த ஆய்வின் பெறுபேறுகள் ஒருசில மாதங்களுள் அறிவிக்கப்படும்.

**நீலக் கொள்கல நிகழ்வுத்திட்டம் ஓங்கி வருகிறது**

புதுக்கப் புகும் பொருட்கள்!

மாநகர நீலக் கொள்கல நிகழ்வுத்திட்டத்துள் தற்பொழுது பிளாஸ்திக்காலான சில்லறைக் கொள்வனவுப் பை, பலசரக்கு கொள்வனவுப் பை, பொலிஸ்தைறீன் பொதி வகைகளும் அடங்கும்.

பலசரக்கு, சில்லறைப் பொருட் கொள்வனவக்கான உருவுதடமற்ற பிளாஸ்திக் பைகள் அல்லது உலோக வேலைப்பாட்டு இணைப்புகள் அல்லது வன் பிளாஸ்திக் கைபிடிகள் என்பவற்றை இனி உங்கள் நீலக் கொள்கலத்துள் இடலாம். பெறுகைச்சீட்டுகளை அகற்றி, எல்லாப் பைகளையும் ஒரே பையிலிட்டு, கைபிடிகளைப் பிணைத்துக் கட்டவும். பின்வரும் பை வகைகள் இந்நிகழ்வுத்திட்டத்துள் அடங்கா: உலர் சலவை உடுப்பு, பால் (உட்பையும் வெளிப்பையும்), பாண், சான்ட்விச் உணவு வகைகளுக்கான பிளாஸ்திக் பொதி.

பொலிஸ்தைறீன் பொதிகளுள் பின்வருவன அடங்கும்: பொலிஸ்தைறீன் காப்பணைகள், இறைச்சித் தட்டுகள், வாங்கிச்செல்லும் உணவுகொள் கலங்கள், கோப்பைகள், முட்டைப் பெட்டிகள், காப்பிக் குவளைகள். எச்மிச்ச உணவுப்பொருட்கள் முழுவதும் அகற்றப்பட வேண்டும். (நிலக்கடலை போன்றவற்றுக்கான) சரைகள், மற்றும் தூய திண்ம பொலிஸ்தைறீன் வகைகள், அதாவது நெகிழ்வு குன்றிய வன் பிளாஸ்திக் தட்டுகள், கண்ணாடிக் குவளைகள், கத்தி-முள்ளுக்கரண்டி வகைகள், தூய திண்ம பொலிஸ்தைறீன், கண்ணாடிக் கோதுகள், கண்ணாடி முட்டைப் பெட்டிகள், பிளாஸ்திக் உருவங்கள், இறுவட்டு-மின்ம ஒளி வட்டுப் பெட்டிகள் தற்போதைக்கு நீலக் கொள்கல நிகழ்வுத்திட்டத்துள் ஏற்கப்பட மாட்டா.

www.toronto.ca/garbage

**ரொறன்ரோவில் புதிய தெருவோர சாதனங்கள்**

**இயைபுபடும் தெருவோர சாதனங்களை ஏற்படுத்தும் திட்டத்தைப் புகுத்தியதன் மூலம் ரொறன்ரொ மாநகரத்தை அழகுபடுத்தும் புதிய ஊழி ஒன்றை மாநகராட்சி மன்றம் கொணர்ந்துள்ளது**

பயணிகள் கூடங்கள், கழிவு/மீள்பாவனைப்பொருள் கொள்கலங்கள், வாங்குகள், விளம்பரங்கள், தகவல் கூடங்கள், பிரசுரப் பெட்டிகள், பொது கழிப்பறைகள், உந்துருளி தரிப்பிடங்கள் என்பன தெருவோர சாதனங்களுள் அடங்கும். நாம் தெருவோரம் கண்ணுறும் துண்டு துணுக்குகளை, இத்தகைய இயைபுபடும் சாதனங்கள் குறைத்து, ரொறன்ரோ மாநகர தெருக்களின் தோற்றத்தையும், அவை எம் உள்ளத்துள் ஏற்படுத்தும் தாக்கத்தையும் மாற்றும்.

அத்தகைய தெருவோர சாதனங்களை இடும் பணி 2008 யூன் மாதம் தொடங்கியது. புதிய பாங்கிலமைந்த 275-க்கு மேற்பட்ட பயணிகள் கூடங்கள் வெற்றிகரமாக அமைத்து முடிக்கப்பட்டன. புதிய வாங்குகள், விளம்பரத் தட்டுகள், கழிவு கொள்கலங்கள் இடப்பட்டு வருகின்றன. அவற்றின் மூலப்பொருட்களும், வடிவங்களும் தரமுயர்ந்தவை. தம்மிடையே இயைபுபடும் வண்ணம் உருவாக்கப்பட்ட தெருவோர சாதனங்களை முதல் தடவையாக ரொறன்ரோ மாநகரம் பெற்றுக்கொள்ளப் போகிறது. "துடினம் கொண்ட தெருக்கள்" (Vibrant Streets) என்னும் அமைப்பு வழிமுறைகளைப் பின்பற்றி, அனைத்து வகைப்பட்ட பாதசாரிகள், பயனாளர்கள் ஆகியோரின் தேவைகளுக்கு மதிப்பளிக்கும் வண்ணம் தெருவோர நடைபாதைகளிலும் மேடுகளிலும் மேற்படி சாதனங்கள் இடப்பட்டு வருகின்றன.

மேற்படி சாதனங்களை இட்டு, பேணும் ஒப்பந்தம் Astral Media Inc. என்னும் அமைப்புக்கு வழங்கப்பட்டது. அடுத்த 20 ஆண்டுகளில், மேற்படி நிகழ்வுத்திட்ட காலத்தில், கிட்டத்தட்ட 26,000 தெருவோர சாதனங்கள் இடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி நிகழ்வுத்திட்டத்தை வகுப்பதில் வடிவமைப்பும், செயற்பாடும் மிகவும் முக்கியமானவை என்று பொதுமக்கள் தரப்புகள் சுட்டிக்காட்டின. ஒப்பந்தத்தை வழங்க முன்னர் (வடிவமைக்கும் தரப்புகள், ஒப்பந்தக் கேள்வி முன்வைக்கக்கூடிய தரப்புகள், பொது வெளி–அணுகுவசதி வாதாட்டத் தரப்புகள் உட்பட) பொதுமக்கள் தரப்புகளுடன் மாநகராட்சி மன்றம் விரிவாகக் கலந்துசாவியது.

toronto.ca/streetfurniture

**வதிகூடங்கள், சொந்த வதிகூடங்கள் – திசைதிருப்பப்படும் கழிவுப் பொருட்கள் பெருகி வருகின்றன**

ரொறன்ரோவில் பருமட்டாக 4,500 பல்வதிகூட கட்டடங்கள் இருக்கின்றன. அவை 500,000 கூடங்கள் கொண்டவை. அவை மாநகர வசிப்பிடங்களுள் அரைவாசி ஆகும். எனினும் 13% கழிவுப் பொருட்களை மாத்திரமே அவை மீள்பாவனைக்கு இடுகின்றன. கழிவுப் பொருட்களுள் 70 விழுக்காட்டை மீள்பாவனைக்கிடுவதே எங்கள் நோக்கம். அதற்கு, வதிகூடங்களிலும், சொந்த வதிகூடங்களிலும் வசிக்கும் மக்கள் பச்சைக் கொள்கல நிகழ்வுத்திட்டத்தில் பங்குபற்ற வேண்டும். 2011ம் ஆண்டுக்கு முன்னர் அவர்கள் அதில் பங்குபற்ற நேரும்.

அடுத்த 18 மாத காலப்பகுதியில் மாதாந்தம் 300 கட்டடங்கள் மாநகர பச்சைக் கொள்கல நிகழ்வுத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். கட்டட உடைமையாளர்கள் ஊடாக பச்சைக் கொள்கல விபரத்திரட்டு, உள்ளக சமையலறைக் கழிவுகலப்புக் கலம் என்பவற்றை மாநகரம் முன்வைத்துள்ளது. தனிவீட்டு உடைமையாளர்கள் இவற்றை ஏற்கெனவே பெற்றுக்கொண்டார்கள்.

கட்டடவாசிகள் நீலக் கொள்கலத்தைப் பயன்படுத்தி தமது கழிவுப் பொருட்களை மீள்பாவனைக்கிடுவதைப் பெருக்குவதற்கு உதவும் நோக்குடன், கட்டட உடைமையாளர்கள் ஊடாக கட்டடவாசிகளுக்கு உட்கூட மீள்பாவனைப் பொருட்கலங்களை வழங்க மாநகரம் முன்வந்தள்ளது. கட்டட உடைமையாளர்கள் இரண்டு வகையான மீள்பாவனைப் பொருட்கலத்துள் ஒன்றைத் தெரிவுசெய்யலாம்: மென் பக்கம் கொண்ட பை அல்லது வன்பக்கம் கொண்ட கலம். அடுத்த 12 மாத காலப்பகுதியில் இப்புதிய மீள்பாவனைப் பொருட்கலங்கள், கட்டடங்களில் ஒப்படைக்கப்படும்.

பச்சைக் கொள்கல, நீலக் கொள்கல நிகழ்வுத்திட்டங்கள் இரண்டுக்கும் உகந்த முறையில் இயங்கும் கழிவகற்றல் முறைமை ஒன்றைப் புகுத்த உதவும்பொருட்டு மாநகரப் பணியாளர்கள், கட்டட உடைமையாளர்களுடனும் முகாமையாளர்களுடனும் ஒத்துழைப்பார்கள். புதிய கட்டடங்கள் சிலவற்றில் மூவகைப்படுத்தும் முறைமையுடன் கூடிய கழிவுப் போறைகள் உள்ளன. எனினும் அநேகமான கட்டடங்களில், கட்டடவாசிகள் தாம் மீள்பாவனைக்கிடும் பொருட்களையும் கலப்புக்கழிவையும் மையக் கழிவு/மீள்பாவனைப் பொருட் களத்துக்கு எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது. கட்டட உடைமையாளர்கள் இந்நிகழ்வுத்திட்டங்கள் குறித்து கட்டடவாசிகளடன் தொடர்புகொள்வதற்கு உதவுமுகமாக வெவ்வேறு விபரக் கூறுகளைத் தேர்ந்தெடுத்து பல்வேறு மொழிகளில் மாநகரம் முன்வைத்துள்ளது.

toronto.ca/garbage

**பொதிவகைகளைக் குறைக்க ரொறன்ரோ நடவடிக்கை எடுக்கிறது**

பொருட்களைப் பொதிவதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்வகைகளை மாநகர நீலக் கொள்கல நிகழ்வுதிட்டத்துக்கு உட்படுத்தும் நோக்குடன், விற்பனை நிலையங்களில் பொதிவகைகளைக் குறைப்பதற்கு 2008 திசம்பர் 2ம் திகதி மாநகரம் தீர்மானித்தது.

2009 யூன் 1 முதல் விற்பனையாளர்கள் ஒவ்வொரு பிளாஸ்திக் பையையையும் குறித்து தமது வாடிக்கையாளரிடம் 5 சதம் கட்டணம் அறவிட வேண்டும். அதற்கு மாற்றுவழியாக விற்பனையாளர்கள் தமது வாடிக்கையாளருக்கு (ஒரு பெட்டி போன்ற) எதனையும் இலவசமாக வழங்கலாம். Food Basics, No Frills, Price Chopper போன்ற பலசரக்கு விற்பனை நிலையங்கள் தமது வாடிக்கையாளருக்கு கட்டணம் விதித்து வருகின்றன. ஆதலால் அவ்விற்பனை நிலையங்களில் விற்கப்படும் பிளாஸ்திக் பைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. அந்த ஐந்து சதக் கட்டணம் ரொறன்ரோ மாநகரத்துக்கு செலுத்தப்படுவதில்லை.

பெரிய பலசரக்கு விற்பனை நிலையங்கள் அந்தப் பணத்தை அபகரிப்பதில்லை என்கிறார் கனடிய பலசரக்கு விநியோக மன்றத்தின் தலைவரும், தலைமை நிறைவேற்று அதிகாரியுமாகிய Nick Jennery. “திரட்டப்படும் பணம், எமது தொழிலில், எடுத்துக்காட்டாக ஒரு புதிய பையை உருவாக்கும் துறையில் மீள முதலீடு செய்யப்படும். பணம் திரட்டும் தொழிலில் நாம் ஈடுபட்டிருக்கவில்லை. வாடிக்கையாளரின் நடத்தையை மாற்றுவதிலேயே நாம் ஈடுபட்டிருக்கிறோம். இந்த உத்தி பயனளிக்கும் என்பது எமக்குத் தெரியும்’’ என்று அவர் தெரிவித்தார்.

2010 யூன் 1ம் திகதிக்கு முன்னர் கொள்வனவுப் பைகள் அனைத்தும் மாநகர மீள்பாவனை முறைமைக்கு இசைவாக அமையவேண்டும். 2012ம் ஆண்டுக்கு முன்னர் பிளாஸ்திக் பை பாவனையை 70 விழுக்காடு குறைப்பதாக பலசரக்கு உற்பத்தித் துறை தெரிவித்துள்ளது.

வாங்கிச்செல்லும் உணவுவகைகளுக்கான பிளாஸ்திக் கலங்கள், மாநகர நீலக் கொள்கல நிகழ்வுத்திட்டத்துக்கு இசைவாக அமையாவிட்டால், 2011 பெப்ரவரி 28ம் திகதிக்குப் பின்னர் அவை தடைசெய்யப்படும். மாநகர நிலையங்களில் புட்டிநீர் விற்பனையைத் தடைசெய்வதற்கும் மாநகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது.

ரொறன்ரோ மாநகரப் பணியாளர்கள் எமது நீலக்கொள்கல நிகழ்வுத்திட்டத்துக்கு இசைவான தேநீர்-காப்பிக் குவளைகள்/மூடிகளை உற்பத்திசெய்யும் வழிமுறையைக் கண்டறியும் நோக்குடன், சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டிருப்பவர்களைச் சந்தித்து வருகிறார்கள். 2009 யூன் மாதம் மாநகர பொதுப் பணி-உட்கட்டமைப்புக் குழு அவர்களின் அறிக்கைகளைச் செவிமடுக்கும்.

toronto.ca/garbage/packaging_reduction.htm

**வாழ்வதற்குச் சிறந்த இடங்கள்**
**பொது வதிவகத் துறையில் ரொறன்ரோ மாநகரத்தின் முதலீடு**
**வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது**

மாநகர வாசிகள் அனைவரும் பத்திரமான, பாங்கான வதிவகத்தில் வாழ்வதற்கு ஏதுவாக நடவடிக்கை எடுப்பதற்கு ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் உறுதிபூண்டுள்ளது. 2008-2009-ல் அந்த இலக்கை நோக்கி நடவடிக்கை எடுப்பதற்கு $75 மில்லியன் தொகையை அது முதலீடு செய்து உதவியுள்ளது. Toronto Hydro Telecom தாபனத்தை விற்றுப் பெற்ற அந்தத் தொகை, மாநகர வதிவக நிறுவனமாகிய ரொறன்ரோ சமூக வதிவகத்தின் (Toronto Community Housing) கூடங்களைப் பழுதுபார்ப்பதற்கு ஒதுக்கப்பட்டது. மாநகர வரலாற்றில் இதுவே மிகப்பெரிய பொது வதிவக முதலீடு.

ஒன்ராறியோ அரசும் $36.5 மில்லியன் நிதியுதவி புரிந்தது. ரொறன்ரோ சமூக வதிவகப் பகுதி அதன் ஆயிரக் கணக்கான வதிவகக் கூடங்களை, குடியிருப்பாளர்கள் வாழ்வதற்கு உகந்தவையாகச் சீரமைப்பதற்கு அவ்விரு நிதிவசதிகளும் உதவும். சமையலறைகளும், குளியலறைகளுமே பெரிதும் பழுதுபார்க்கப்பட வேண்டியவை. அவற்றைச் சீரமைப்பதிலேயே கவனம் செலுத்தப்படும்.

ஏற்கெனவே பணி நன்கு இடம்பெற்று வருகிறது. 2008-ல் 3,500 வதிகூடங்களில் 2,598 சமையலறைகளும், 2,042 குளியலறைகளும் மாற்றப்பட்டன. 2009-ல் 3,200 வதிகூடங்களில் 2,500 சமையலறைகளும், 1,500 குளியலறைகளும் சீரமைக்கப்படும்.

மாநகர பசுமைத் திட்ட முயற்சிகளுக்கும் இப்பணி உதவுகிறது. இயன்றவிடத்து சூழலுக்கு உகந்த பொருள்வகைகளைக் கொண்டு குளியலறைகள் சீரிடப்படுகின்றன. வனம் பேணல் மன்றத்தின் (Forest Stewardship Council) அங்கீகாரத்துடன் ஒன்ராறியோவில் உற்பத்திசெய்யப்பட்ட மரப்பொருட்கள், மின்வலு உடுக்குறி (Energy Star) கொண்ட சாதனங்கள் (குறைந்த மின்வலு தேவைப்படும் சாதனங்கள்), மின்விளக்குகள், மீள்பாவனைக்கிடும் வண்ணக் கலவை, சூழலுக்கு உகந்த ஓடுகள், சமையல் மேசைகள், குறைத்து நீர் பாய்ச்சும் கழிகலங்கள், குழாய் முனைகள், குளியல்தாரைத் துளைகள் அவற்றுள் அடங்கும்.

குறைந்த மின்வலுவைப் பயன்படுத்தும் வண்ணம் 10 கட்டடங்களை சீரமைப்பதற்கும் மேற்படி நிதிவசதிகள் ரொறன்ரோ சமூக வதிவகப் பகுதிக்கு உதவும். சூழலுக்கு உகந்தவாறு நெடுங்காலம் நிலைபெறும் வண்ணம் கட்டடங்களைச் செம்மைப்படுத்தவதற்கும் இது உதவும். கட்டடவாசிகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அது முக்கியம். நீர், மின்வலு விரயத்தையும், காலநிலை மாற்றத்துக்கு துணைபோகும் புவி வெப்பவாயு வெளிப்படுவதையும் இம்முயற்சிகள் குறைக்கும்.

வதிவக பழுதுபார்ப்புத் துறையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளால் விளையும் நன்மைகள் முக்கியமானவை. அவை நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்து, ரொறன்ரோ மாநகர பொருளாதாரத்தை மேம்படுத்தும். பொருளாதார உந்துவிசை பெருகுவதால் விளையும் தாக்கம், வேறு உட்கட்டுமான முதலீடுகளால் விளையும் தாக்கத்தைவிட அதிகம். மத்திய, மாகாண அரசுகள் மேற்கொள்ளும் மேலதிக முதலீடுகளும் அதற்கு நலம் பயக்கும்.

torontohousing.ca/investing_buildings/building_improvements

**_பசுமை வாழ்வு வாழ்க நிதியம்_ "பசுமை வாழ்வு வாழ்க" சேதியைப் பரப்பி வருகிறது**

குறிச்சிக் குழுமங்கள், சமூகக் குழுமங்கள் என்பன காலநிலை மாற்றம் குறித்து நடவடிக்கை எடுக்க உதவும் *ரொறன்ரோ பசுமை வாழ்வு வாழ்க நிதியம்* இந்த ஆண்டில் $2.2 மில்லியனாக அதிகரித்தது. காலநிலை மாற்றத்துக்குத் துணைபோகும் வாயுவெளிப்பாடுகளைக் குறைக்கும் அடிமட்ட முன்னெடுப்புகளுக்கு மேற்படி நிதியம் உதவுகிறது. இவை *ரொறன்ரோ பசுமை வாழ்வு வாழ்க நிகழ்வுத்திட்டத்தின்* முக்கிய கூறாகும். 2008-ல் மீளெரிபொருள் பாவனை, உள்ளூர் உணவுற்பத்தி, பசுமைக் கூரை முதலியவற்றைப் பெருக்கும் திட்டங்களுக்காக 14 சமூகக் குழுமங்களுக்கு ஏறக்குறைய $700,000 அளிக்கப்பட்டது.

2008-ல் நிதியுதவி பெற்ற குழுமங்களுள் *பசுமை மிகுந்த மாநகரம்* (Greenest City) ஒன்று. அதன் திட்டம் *தரையிலிருந்து எழுச்சி* (From the Ground Up) எனப்படும். பார்க்டேல் (Parkdale) வாசிகள் உள்ளூரிலேயே உணவுப் பயிர்களை வளர்ப்பதற்கு வேண்டிய திறன், துணை, இடம் என்பவற்றை அது முன்வைத்துள்ளது. புவிவெப்பவாயு வெளிப்படுவதைத் தணித்து, வேலை இழக்கும் இக்கட்டை எதிர்நோக்கியுள்ள 12 இளையோருக்கு பசுமை "நகர்ப்புற பயிர்ச்செய்கையாளர்" வேலைகளை அது தோற்றுவிக்கும்.

"தாயகம் முதல் புக்ககம் வரை - உந்துருளிப் பயணம்" (Cycling – From Back Home to our New Home) என்பது பிறிதொரு திட்டம். கனடாவில் புதுக்கக் குடிபுகுந்தோர் கனடிய சமூகத்துடன் ஒருங்கிணைந்து, தங்களை மாற்றியமைக்குந் தோறும் உந்துருளியை ஒரு நிலைபெற்ற போக்குவரத்துச் சாதனமாக அது மேம்படுத்தும். சூழலுக்குகந்த போக்குவரத்து வழமை தொடர்வதற்கு அது துணைநிற்கும்.

மாநகர வாசிகளுக்காக பசுமை வாழ்வு விபரங்கள், தள்ளுபடிகள் என்பவற்றுடன் கூடிய ஓர் இணையத்தளத்தையும் *ரொறன்ரோ பசுமை வாழ்வு வாழ்க நிதியம்* நடத்தி வருகிறது. குறிச்சிக் குழுமங்கள், சமூகக் குழுமங்கள் ஒருங்கிணைந்து, கூட்டு நடவடிக்கை எடுப்பதற்கு உதவும் நிபுணத்துவ மதியுரையையும் அது வழங்கி வருகிறது.

ரொறன்ரோவை பசுமை மிகுந்த மாநகரமாக மாற்றுவதற்கு உதவும் திட்டங்கள் கொண்ட சமூக, குறிச்சிக் குழுமங்கள் *ரொறன்ரோ பசுமை வாழ்வு வாழ்க நிதியத்துக்கு* விண்ணப்பிக்கலாம். 2009-ம் ஆண்டுக்கான முதற் சுற்று நிதிய விண்ணப்பங்கள் பெப்ரவரி 2ம் திகதி தொடங்கின. இரண்டாவது சுற்று யூலை 3ம் திகதி தொடங்கும்.

livegreentoronto.ca

**நூலகங்கள் – வேலை தேடத் தொடங்குவதற்கு சிறந்த இடம்**
*இலவச கணினி-இணைய வசதி, இலவச தகவல், இலவச நிபுணத்துவம்*

கடந்த வசந்தகாலத்தில் 33 வயது கொண்ட Terry தனது தாயகமான உக்கிறேனிலிருந்து றொறன்ரோவுக்கு வந்து ஒருசில நாட்களுள் வதிவகமிழந்தார். ஆனாலும், ''நான் நெடுங்காலமாக வதிவகமற்றவராக இருப்பேன் என்று என்றுமே நான் கருதியதில்லை'' என்று அக்டோபர் மாதம் Terry தெரிவித்தார்.

தற்பொழுது வெற்றிகரமாக இயங்கும் தனது இணையத் தொழிலகத்தை அமைப்பதற்கு வேண்டிய ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு றொறன்ரோ குறிப்பெடுப்பு நூலகத்தையே (Toronto Reference Library) Terry பயன்படுத்தினார். குறிப்பாக 99 றொறன்ரோ நூலகக் கிளைகளிலும் கிடைக்கும் இலவச இணைய வசதியை Terry பயன்படுத்தினார்.

எனினும், நூலகம் தரும் வேலைவாய்ப்பு விபரங்களைப் பொறுத்தவரை இலவச இணைய வசதி என்பது ஒரு தொடக்கம் மட்டுமே.

''இணைய மூலம் வேலை தேடல், புதியவர்களின் தகைமையீடு, தகைமைத் திரட்டு வரைதல் பற்றிய இலவச பட்டறைகள் போன்றவற்றை நூலகம் முன்வைக்கிறது. பல்வேறு துறைகள் சார்ந்த நூல்வகைகள், நீடித்த இணைய வசதிகள் எம்வசம் உள்ளன'' என்கிறார் நூலக முகாமையாளர் Greg Kelner.

நூலக இணைய சேவைகளுள் பணிதேடல் அடையாளங்கள் (Career Bookmarks) தலையாயவை. அவை இணைய மூலம் இலவசமாகப் பணி, வேலை முதலியவற்றைத் தேடும் விபரங்களை அளிப்பவை. எல்லா மட்டங்களையும் சேர்ந்தவர்கள் பணி, வேலை முதலியவற்றைத் தேடுவதற்கும் நாடுவதற்கும் வேண்டிய வசதிகளையும், தரவுகளையும், கட்டுரைகளையும் பிறவற்றையும் அளிப்பவை. Organized under six topics – உபாயங்கள் (Strategies), சுயகணிப்பீடு (Self Assessment), பணித் தெரிவுகள் (Career Choices), உங்களை விலைப்படுத்துங்கள் (Market Yourself), வேலைகள் (Jobs), வேலையில் வெற்றி (Success on the Job) என்னும் ஆறு தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்த இணையத்தளத்தை எளிதில் பயன்படுத்தலாம். பணி விருத்தி அம்சங்கள் அனைத்தையும் அது கொண்டுள்ளது.

''வேலைவாய்ப்புத் தேவைப்படுவோருக்கு எமது நூலகத்தால் பெரிதும் உதவ முடியும். எடுத்துக்காட்டாக, புதுக்கக் கனடாவில் குடியேறியவர்கள் முன்கூட்டியே காலம் குறித்து, றொறன்ரோ குறிப்பெடுப்பு நூலகத்தின் அல்லது நோர்த் யோர்க் மத்திய நூலகத்தின் பணியாளர்களை 30 நிமிடவேளை இலவசமாகச் சந்தித்து, வேலைதேடல், தகைமையீடு போன்ற விடயங்களை ஆராயலாம்'' என்கிறார் நூலக முகாமையாளர் Phyllis Jacklin.

416-393-7131

**torontopubliclibrary.ca**

**வதிகூடக் கட்டட பரிசோதனைகள் அதிகரிப்பு**

பழுதுகளுடன் கூடிய வதிகூடக் கட்டடங்களில் கட்டட விதிகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளைப் பெருக்கும் நோக்குடன் கட்டட ஆய்வணி 2008 திசம்பர் 1-ம் திகதி செயலில் குதித்தது. ரொறன்ரோவில் அமைந்துள்ள வதிகூடக் கட்டடங்கள் தகுந்த முறைப்படி பேணப்படுவதற்கும், மக்கள் வசிப்பதற்கும், மக்களைப் பாதுகாப்பதற்கும் உகந்த கட்டடங்களாக அவை நீடிப்பதற்கும் ஏதுவாக இந்த அணி நடவடிக்கை எடுத்து வருகிறது. காலகதியில் எல்லாக் கட்டடங்களையும் பரிசோதிப்பதற்காகவே இந்த நிகழ்வுத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நடைமுறைப்படுத்தும் அணி 15 உறுப்பினர்களைக் கொண்டது. அவர்கள் முதலாவது ஆண்டில் 176 கட்டடங்களை ஆய்விட்டு, கட்டளைகள் விடுப்பார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும், உள்ளூர் மன்றாளருடன் உசாவி, இரு கட்டடங்களும், மாநகரப் பணியாளர்களின் அறிவையும் அனுபவத்தையும் கொண்டு இரு கட்டடங்களும் தெரிவுசெய்யப்படும். தனியார் துறையினருக்கும், மாநகராட்சி மன்றத்துக்கும் சொந்தமான கட்டடங்கள் ஆய்வுக்கு உட்படும்.

ஊர்தி மடுவங்கள், மாடிமுகப்புகள், வெளிப்புறத் தரை, மின்சாரம்-வெந்நீர்-உள்வெப்பம் போன்ற பொது வசதிகளே பெரிதும் கட்டட ஆய்வுக்கு உள்ளாகும். கட்டடத்தின் உள்ளே வகைமாதிரிக்கு எழுந்தமானமாகவும், வதிகூடவாசியின் இசைவுடனும் அவருடைய வதிகூடம் பரிசோதிக்கப்படும்.

ஆய்வணி கட்டடத்துக்கு வருமுன்னர் வதிகூடவாசிகளுக்கு அறிவிக்கப்படும். கட்டட வளவில் ஒரு நடமாட்ட அலுவலகத்தை அது அமைக்கும். கட்டட உடைமையாளர்களால் போக்கப்படாத குறைகள் எவற்றையும் கட்டடவாசிகள் ஆய்வணியிடம் தெரிவிக்கலாம்.

மாநகர இணையத்தளத்தைப் பார்த்து, உங்கள் கட்டடம் பரிசோதிக்கப்படுமா, பரிசோதனையின் பெறுபேறுகள் எவை, விடுக்கப்பட்ட கட்டளைகள் எவை என்பதை அறிந்துகொள்ளவும். உங்கள் கட்டடம் உடனடியாகவே மேற்படி நிகழ்வுத்திட்டத்துக்கு உள்ளாகவில்லை என்றாலும், உங்கள் மாநகர உரிம-நியம அலுவலகத்துடன் தொடர்புகொண்டு, கட்டட உடைமையாளர்களால் போக்கப்படாத குறைகளை நீங்கள் முன்வைக்கலாம்.

buildingauditteam@toronto.ca
toronto.ca/licensing/mrab.htm
416-396-7228

**றொறன்ரோ போக்குவரத்து ஆணைய பயணிகளிடம் விபரங்களைக் கையளித்தல்**

2009ம் ஆண்டில் அதிக பேருந்துகள், அதிக மார்க்கங்கள், குறைந்த தாமதங்கள் கொண்டு எமது சேவைகளை மேம்படுத்தும் பணி செவ்வனே இடம்பெற்று வருகிறது. இந்த அண்டில் மாநகரப் பயணிகள் எமது சேவைகளைப் பயன்படுத்தி தமது பயண அனுபவத்தை மேலும் சிறக்கச் செய்வதை உறுதிப்படுத்தும் கட்டத்தை நாம் நெருங்கியுள்ளோம்.

இணைய இணைப்பு, BlackBerrys, PDAs, செல்பேசிகள் கொண்ட எமது வாடிக்கையாளர்கள் எம்மிடமிருந்து சேவைத் தடங்கல்கள், பேருந்துகள் திசை திருப்பப்படல், அடுத்த பேருந்து-மின்பேருந்து-சுரங்கத் தொடருந்து வந்தடையும் நேரம் பற்றிய ஆகப்பிந்திய அரிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் *பயணம் திட்டமிடல்* என்னும் இணைய அம்சமும் சேரும். இணைய இணைப்பு கொண்ட எவரும் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு தனது பயணத்தை திட்டத்தை வகுக்க முடியும். அத்துடன் தாம் திட்டமிடும் பயணத்துக்கு வேண்டிய நேரத்தையும் கணிக்க முடியும்.

றொறன்ரோ போக்குவரத்து ஆணைய சேவைகளை அன்றாடம் பருமட்டாக 1.6 மில்லியன் பேர் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு பத்திரமான, நம்பிக்கையான சேவைகளை அளிப்பதில் அது கவனம் செலுத்தி வருகிறது. பயணிகள் ஆணையத்துடன் கலந்துறவாட விரும்புகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். பேருந்து, மின்பேருந்து வகைகளில் GPS சாதனத்தைப் பயன்படுத்தி அடுத்த பேருந்து அல்லது மின்பேருந்து வரும் நேரத்தை அறிவது பயணிகளின் அனுபவத்தைப் பெரிதும் மேம்படுத்தும். எடுத்துக்காட்டாக, ஒரு பயணி தன் வீட்டை விட்டுப் புறப்படுமுன் இணைய மூலம், அடுத்த பேருந்து உள்ள இடம், அதன் மார்க்கம் என்பவற்றை உடனுக்குடன் துல்லியமாகக் கண்டறிய முடியும்.

கடந்த இலையுதிர் காலத்தில் டண்டாஸ் நிலையத்தில் ஒரு முன்தேர்வுத் திட்டத்தை அது மேற்கொண்டது. அடுத்த சுரங்கத் தொடருந்து வரும் நேரத்தை அது காட்டியது. சுரங்கத் தொடருந்து மேடைகளில் உள்ள ஒளிநாடாத் திரைகள் மூலம் அடுத்த தொடருந்து வரவு விபரம் காட்டப்படுகிறது. எதிர்பாராத தாமதம் ஏற்படும்பொழுது இன்றியமையாத விபரங்கள் வெளியிடப்படுகின்றன. 2009-ல் சுரங்கத் தொடருந்து நிலையங்கள் அனைத்திலும் அத்தகைய திரைகள் பொருத்தப்படும். எல்லா மேடைகளிலம் அடுத்த தொடருந்து வரவு விபரங்களை அவை காட்டும்.

2009-ல் TTC சுரங்க மாடிகள், பேருந்து மேடைகள், மின்பேருந்து தரிப்பிடங்கள் அனைத்திலும் அடுத்த பேருந்து, தொடருந்து வரவு விபரச் சைகைகள் பொருத்தப்படும். உடனுக்குடன் LCD, LED சைகைகள் அடுத்த பேருந்து, தொடருந்து வரவு விபரங்களை வழங்கும். பயணிகள் அனைவரும் SMS சேதிப் பரிமாற்றம் மூலம் அடுத்த TTC தரைப்புற ஊர்தி வரவு விபரங்களை அறிய மேலதிக வசதிகள் ஏற்படுத்தப்படும். இறுதித் திட்டம் கைகூடும்பொழுது தரிப்பிடங்கள் அனைத்திலும் தனித்துவமான அடையாளம்காட்டி ஒன்று பொருத்தப்படும். அதன்படி (இணையம் அத்துடன் / அல்லது SMS சேதிப் பரிமாற்றம் போன்ற) மின்-இணைப்பற்ற தொழினுட்பவியல் மூலம் திட்டவட்டமான தரிப்பிட விபரங்களை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்ளலாம்.

மீளவடிவமைத்த ஓர் இணையத்தளத்தை ஆணையம் கடந்த ஆகஸ்ட் மாதம் முன்வைத்தது. மக்கள் எளிதில் நாடிப் பயன்படுத்தும் வண்ணம் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. 2007 நவம்பர் மாதம் சுரங்கத் தொடருந்துச் சேவைத் தடங்கல் அறிவித்தல்கள் இணையத்தளத்தில் புகுத்தப்பட்டு, அது விரிவாக்கப்பட்டது. புதிய விபரங்களும் பிரிவுகளும் தொடர்ந்து சேர்க்கப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் பயணிகள் தாமாகவே தமது பயணங்களைத் திட்டமிடுவதற்கும், வங்கிப் பற்று, கடன் அட்டைகள் கொண்டு சீட்டுக் கொள்வனவு செய்வதற்கும் ஏதுவாக அது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் சேவைத் தடங்கல் அறிவிப்புகள், திசைதிருப்பங்கள், விசேட நிகழ்வுகள் பற்றிய முன்னறிவிப்புகளை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ஒப்பத்தொகை செலுத்துவதற்கு இந்த இணையத்தளம் வாடிக்கையாளர்களை அனுமதிக்கும். இணையமூலம் உங்கள் மின்னஞ்சல் முகவரி கொண்டு ஒப்பத்தொகை செலுத்தினால், திட்டமிட்ட அல்லது எதிர்பாராத பெரிய சேவைத் தடங்கல்கள் நேரும்பொழுது எங்கள் முறைமை தானாகவே ஒரு சேதியை உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பும். அல்லிப்பொழுதுக் கலைவிழா (Nuit

Blanche) போன்ற விசேட நிகழ்ச்சிகள் இடம்பெறும்பொழுது ரொறன்ரோ வாசிகள் நலன் கருதி எமது சேவைகள் பெரிதும் அதிகரிக்கப்படுவதுண்டு. எதிர்வரும் விசேட சேவைகள் குறித்து வாடிக்கையாளர்கள் மின்னஞ்சல் மூலம் முன்னறிவிப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

இணையமூல பயணத் திட்ட விண்ணப்பம் என்பது மிகவும் எதிர்பார்க்கப்படும் அம்சங்களுள் ஒன்று. எதிர்வரும் கோடையில் இந்த இணையவசதியை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பயணிகள் கிழமையில் 7 நாட்களும், அன்றாடம் 24 மணித்தியாலங்களும் சேவை மார்க்க விபரங்களையும், நேர மையங்களையும், நடைத் தூரங்களையும் பயன்படுத்தி, தமது பயணங்களைத் தாமாகவே திட்மிடும் வசதியை நாங்கள் ஏற்படுத்துவோம்.

ரொறன்ரோ போக்குவரத்து ஆணைய சேவை, இம்மாநகரத்தைப் பிணைத்து இழையோடியுள்ளது. தொழினுட்பத்தைப் பயன்படுத்தி எங்கள் பயணிகளுக்கு விபரம் தெரிவிப்பது, அவர்களின் பயண அனுபவத்தை மேலும் சிறக்கச் செய்வதாய் அமையும்.

ttc.ca

**ரொறன்ரோ மாநகர நீர்மானிகள் - உயர்-தொழினுட்பமயம்**

இந்த ஆண்டு இம்மாநகரம் முழுவதும் தன்னியக்க நீர்மானிப் புள்ளியீட்டு முறைமையை ரொறன்ரோ மாநகரம் பொருத்தத் தொடங்கும். நீர்மானிப் புள்ளியீட்டை மாநகரம் எங்கும் உள்ள தரவு திரட்டும் பிரிவுகளுக்கு புதிய மானிகள் நேரடியாக அனுப்பும். அப்புறம் அவை மத்திய கணினித் தரவுத்தளத்துக்கு அனுப்பப்படும். தற்பொழுது மாநகரம் எங்கும் பயன்படுத்தப்படும் நீர்மானிகளுள் பெரும்பாலானவை அவற்றின் பயன்பாட்டுக் கால எல்லையை அடைந்துவிட்டன. புதிய நிகழ்வுத் திட்டத்துக்கமைய பழைய மானிகள் அகற்றப்பட்டு, மிகவும் திறம்பட்ட, நவீன தொழினுட்பம் கொண்ட புதிய மானிகள் பொருத்தப்படும்.

தன்னியக்க நீர்மானிப் புள்ளியீட்டு முறைமையைப் பயன்படுத்துவதில் பல நன்மைகள் உண்டு. மாநகரவாசிகள் தமது நீர் நுகர்வை மேன்மேலும் புரிந்துகொள்ளுந்தோறும், மாநகர நீர் சேமிப்பு பெருகும். புதிய முறைமை அனைவருக்கும் சமவாய்ப்பளிக்கும். அனைவருக்கும் ஒரேவிதமாகவே கட்டணம் விதிக்கப்படும். நீர் ஒழுகுதல், குழாய்கள் உடைதல், மூலநீர்க் குழாய் திறந்திருத்தல் மூலம் நீர் இழக்கப்படுவதை நன்கு கண்டறிவதில் புதிய மானிகள் மாநகரத்துக்கு உதவும். இனி மாநகரப் பணியாளர்கள் வீடுவிடாகச் சென்று புள்ளியீட்டைப் பதிவுசெய்ய நேராது.

மேற்படி கட்டாய தன்னியக்க நீர்மானி நிகழ்வுத்திட்டம் முதற்கண் நீர்க் கட்டணத்தை மட்டமாகச் செலுத்தும் மாநகரவாசிகளிடையே புகுத்தப்பட்டு, அப்புறம் குறிச்சி குறிச்சியாக விரிவுபடுத்தப்படும். மாநகரம் முழுவதிலும் உள்ள 465,000 நீர்மானிகளையும் மாற்றும் பணியை நிறைவேற்றுவதற்கு ஆறு ஆண்டுகள் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை இம்மாநகரம் மேற்கொண்ட மாபெரும் திட்டங்களுள் ஒன்றாகிய மேற்படி திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கு ரொறன்ரோ நீர்ப் பகுதி பாடுபட்டு வருகிறது. எதிர்வரும் மாதங்களில் மாநகர இணையத்தளத்தில் மேலதிக விபரங்கள் கிடைக்கும்.

toronto.ca/water

**கோடை நீர் சேமிப்பு மதியுரைஞரின் வருகைக்குப் பதிவுசெய்யவும்!**

கோடை நீர் சேமிப்பு மதியுரைஞரின் வருகைக்கு இப்பொழுதே நீங்கள் பதிவுசெய்யலாம். வெளிப்புற நீர்ப் பாவனையைக் குறைத்து, பணத்தை மீதப்படுத்தும் விதத்தை அறிந்துகொள்ளவும். தரையமைப்பு மதியுரைஞர் ஒருவரைக் கொண்டு உங்கள் புல்-தரையையும், கொல்லையையும் **இலவசமாகக்** கணிப்பிடுவிக்கவும். அவருடைய வருகை மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை இடம்பெறும். பதிவுகள் நிறைந்து வருகின்றன.

416-392-7000
savewater@toronto.ca

**இலக்கத்தின் முக்கியத்துவம் என்ன?**

411, 911, 211, விரைவில் 311. இவ்விலக்கங்களுக்கு இடையே என்ன வேறுபாடு? அநேகமானவர்கள் 411, 911 இரண்டையும் அறிந்திருப்பார்கள் – தொலைபேசி இலக்க உதவிக்கு அழைக்கவேண்டிய இலக்கம்: 411. அவசர சேவைக்கு அழைக்கவேண்டிய இலக்கம்: 911.

அதேவேளை, 911 சேவைக்கு எந்த மொழியிலும் அழைக்கலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? அது உண்மை – ரொறன்ரோவில் வாழும் பல்வேறு சமூகங்களையும் சேர்ந்த மக்கள் அனைவரும் 150-க்கு மேற்பட்ட மொழிகளில் உயிர்காப்பு நாடி 911 இலக்கத்தை அழைத்து அவசர சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அவசர சேவைப் பணியாளர்களை அனுப்பிவைக்கும் அதிகாரிகள் உடனுக்குடன் மொழிபெயர்ப்பாளர்களுடன் தொடர்புகொள்ள வல்லவர்கள். தொலைபேசி அழைப்புகளின்பொழுது உதவுவதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் அன்றாடம் 24 மணித்தியாலங்களும் காத்திருக்கிறார்கள். பேசப்படும் மொழியை நிச்சயித்து, அதற்குரிய மொழிபெயர்ப்பாளருடன் உடனுக்குடன் தொடர்புகொள்ளப் பயிற்றப்பட்டவர்களாகவே மேற்படி அதிகாரிகள் விளங்குகிறார்கள். அவசர உதவி நாடுவோர் எந்த மொழியிலும் உதவி கேட்டு 911 இலக்கத்தை அழைக்கத் தயங்கக்கூடாது.

211 என்பது உங்கள் சமூக இணைப்பாகும். சமூக, சுகாதார, மற்றும் பிற சமூகம் சார்ந்த சேவைகள் பற்றிய இலவச விபரங்களுக்கு அழைக்கவேண்டிய இலக்கம் 211. அது உங்களை ஒரு தகவல் விற்பன்னருடன் இணைக்கும். அவரால் அன்றாடம் 24 மணித்தியாலங்களும் உங்களுக்கு விபரம் தரவும், உங்களை உரியவர்களுடன் தொடர்புபடுத்தவும் முடியும். எடுத்துக்காட்டாக, நீங்கள் கனடாவில் புதுக்கக் குடியேறியவர் என்றால், நீங்கள் வேலைவாய்ப்புப் பயிற்சியை நாடுகிறீர்கள் என்றால், உங்கள் குடும்பத்தவர் ஒருவர் போதைப்பொருள் நுகர்வுக்கு அடிமைப்பட்டிருந்தால், அவரைக் குணப்படுத்துவதற்கான நிகழ்வுத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால், உங்கள் கைப்பையை நீங்கள் தொலைத்தால், உங்கள் அடையாள ஆவணங்களைப் புதுப்பிக்கும் இடம் உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்களுக்கு மணவாழ்வுப் புத்திமதி தேவைப்பட்டால், வழமையான வேலை-நேரத்துக்குப் பின்னர் செயற்படும் மருத்துவ சிகிச்சைக் களம் அமைந்திருக்கும் இடம் உங்களுக்குத் தெரியாவிட்டால், அழைக்கவும்: 211.

**311 – உங்களுக்கு சேவையாற்றும் ரொறன்ரொ – யூன் மாதம் முதல்**

2009 யூன் மாதம் முதல் ரொறன்ரோவாசிகள் அன்றாடம் 24 மணித்தியாலங்களும், கிழமையில் 7 நாட்களும் 311 இலக்கத்தை அழைத்து, அவசரமற்ற மாநகர சேவைகள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தெருக்குழி அமைந்துள்ள இடம், கழிவு அகற்றப்படாத இடம் பற்றிய விபரங்களை நீங்கள் விரைவாகவும் எளிதாகவும் அறிவிக்கலாம். உங்கள் வீட்டுக்குக் கிட்டிய பனிச்சறுக்கு விளையாட்டுக் களம் திறந்திருக்கும் நேரத்தை அறிந்துகொள்ளலாம். மாநகர சேவைகள் எவற்றையும், அனைத்தையும் பற்றிய விபரங்கள் 311 இலக்கத்தின் ஊடாகக் கிடைக்கும். பல சந்தர்ப்பங்களில் நீங்கள் சேவை நாடி விடுத்த வேண்டுகோள் மீது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கையை நீங்கள் தெரிந்துகொள்ளலாம். 311 இலக்கத்தை நீங்கள் எந்த மொழியிலும் அழைத்து உதவி பெறலாம்.

411, 911, 211 என்னும் மூன்று இலக்கங்களும், விரைவில் வரவுள்ள 311 இலக்கமும் மாநகரவாசிகளுக்கு வெவ்வேறு சேவைகளை அளிக்கும். உங்களுக்கு வேண்டிய சேவைக்குரிய சரியான இலக்கத்தை தவறாது அழைக்கவும்.

**ரொறன்ரோவாழ் முதியோரின் விசேட தேவைகளை நிறைவேற்றல்**

முதியோரின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் சேவைகளையும், நிகழ்வுத் திட்டங்களையும் மேற்கொள்வதற்கு ரொறன்ரோ மாநகரம் உறுதிபூண்டுள்ளது. முதியோர், முதியோர் அமைப்புகள், பங்கேற்பு அமைப்புகள், மத்திய - மாகாண அமைப்புகளுடன் கலந்துசாவி, அத்தகைய சேவைகள் உடனடியாகக் கிடைக்கவும், இலகுவாகப் பெற்றுக்கொள்ளவும் மாநகரம் வழிவகுத்து வருகிறது. முதியோர் அடிக்கடி மாநகரத்திடம் எழுப்பும் வினாக்களுள் சில பின்வருமாறு:

**அரசாங்கம் அளிக்கும் சேவைகள், உதவிகள் பற்றி நான் அறிந்துகொள்வது எங்ஙனம்?**
முதியோர் 2-1-1 என்னும் தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தி, அல்லது http://www.211toronto.ca/splash.jsp என்னும் இணையத்தளத்தை நாடி, 20,000க்கு மேற்பட்ட சமூக, சுகாதார, அரசாங்க சேவைகள் பற்றிய விபரக்கொத்தைப் பெற்றுக் கொள்ளலாம். மாநகர பொது தகவல் தொலைபேசி இலக்கம்: 416-338-0338. மாநகர இணையத்தளத்திலும் மேற்படி சேவைகளும் நிகழ்வுத்திட்டங்களும் காணப்படுகின்றன: toronto.ca/seniors. நிகழ்வுத்திட்டங்கள், உதவிகளுக்கு எடுத்துக்காட்டுகள்: இடவசதி, நிதிய வளங்கள், வெளியீடுகள், சோலைகள், பொழுதுபோக்குகள், போக்குவரத்து, சுகாதாரம்.

**முதியோருக்காகப் பனி அப்புறப்படுத்தும் நிகழ்வுத்திட்டம் உண்டா?**
முந்திய எற்றொபிக்கோ, நோர்த் யோர்க், ஸ்காபறோ குறிச்சிகளில் பெரும்பாலான நடைபாதைகளிலும், ஈஸ்ட் யோர்க், யோர்க் குறிச்சிகளில் பல நடைபாதைகளிலும், ரொறன்ரோ குறிச்சியில் சில நடைபாதைகளிலும் 8 செ.மீட்டருக்கு (பருமட்டாக 3 அங்குலத்துக்கு) மேற்பட்ட பனி விழுந்தால், அது 36 மணித்தியாலங்களுக்குள் வாரப்பட்டுவிடும். தொடர்ச்சியாக வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு அனுதிக்கபட்ட தெருக்களில் நடைபாதைகள் மிகவும் ஒடுங்கியவை. அத்தகைய இடங்களில் வசிப்பவர்கள் பனிவீழ்ந்து 12 மணித்தியாலங்களுக்குள் தமது வீட்டை அண்டிய நடைபாதையில் விழுந்த பனியையும், உறைந்த பனியையும் அப்புறப்படுத்த வேண்டும்.

நீங்கள் ஒரு முதியோர் என்றால், அல்லது நடைபாதையில் விழும் பனி மாநகரத்தால் அப்புறப்படுத்தப்படாத ஓர் இடத்தில் வலுக்குறைவுடன் வசிப்பவர் என்றால், நீங்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு, நடைபாதைப் பனியை அப்புறப்படுத்துவதற்குப் பதிவு செய்யலாம்: 416-392-7768 கிளை: # 1.

சொந்த வளவில் விழும் பனியை அப்புறப்படுத்த உதவி நாடும் முதியோரும் வலுக்குறைந்தோரும் 416-338-0338 என்னும் தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தி ரொறன்ரொ தகவல் சேவையை அழைத்து, அல்லது accesstoronto@toronto.ca என்னும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி அத்தகைய சேவைகளை மேற்கொள்ளும் அமைப்புகளின் நிரலைப் பெற்றுக்கொள்ளலாம். பெயரளவில் ஒரு கட்டணம் உண்டு. toronto.ca/faq/seniors.htm

**எனக்கு நிதியுதவி தேவைப்பட்டால், என்ன செய்வது?**
அரச, அரசு-சாரா நிதிய, சமூக உதவி நிகழ்வுத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் அவசர நிதியங்கள், வாடகை வங்கிகள், ஒன்ராறியோ வலுக்குறைவு உதவி நிகழ்வுத்திட்டம், ஒன்ராறியோ வேலைநலம், முதுமை ஓய்வூதியம், வலுக்குறைவு உதவிப்படிகள் போன்ற வருமான சேர்மானங்கள் அடங்கும். படிவங்களையும் விண்ணப்பங்களையும் நிரப்புவதில் உதவக்கூடிய முகமையகங்களும் உள்ளன. மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்: 2-1-1. அல்லது நாடவும்: www.211toronto.ca.

**மாநகரத்திடம் வரி, நீர் நிவாரண நிகழ்வுத்திட்டங்கள் உள்ளனவா?**
வருமானம் குறைந்த முதியோருக்கும் வலுகுறைந்தோருக்கும் நீர்க் கட்டணத் தள்ளுபடி பெறுந் தகுதி கிடைக்கக்கூடும். தமது ஆதன வரி அதிகரிப்பை பின்போடுவிக்கும் அல்லது நீக்குவிக்கும் தகுதியும் அவர்களுக்கு கிடைக்கக்கூடும். ஆண்டுதோறும் அத்தகைய நிகழ்வுத்திட்டம் ஒவ்வொன்றுக்கும் நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். 2009ம் ஆண்டுக்கான நிகழ்வுத்திட்ட தகுதிப் பிரமாண விபரங்கள் ஆதன வரிச்சீட்டில் இடம்பெறும்.

**எனக்கு வீட்டுதவி தேவைப்பட்டால், என்ன செய்வது?**
உங்கள் சொந்த வீட்டில் நீங்கள் தொடர்ந்து வசிக்க விரும்பினால், பல்வேறு தரப்புகளிடமிருந்து உங்களுக்கு வீட்டுதவிச் சேவைகள் கிடைக்கும். உங்கள் பராமரிப்புத் தேவைகள் சமூக பராமரிப்பு வாய்ப்பு நிலைய (CCAC) தகுதிப் பிரமாணங்களை நீங்கள் நிறைவுசெய்தால், அத்தகைய சேவைகள் அந்நிலையத்திலிருந்து உங்களுக்கு கிடைக்கக் கூடும். பல்வேறு சமூக உதவி முகமையகங்களிடமிருந்தும் வீட்டுதவிச் சேவைகளை நீங்கள் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தாமாகவே கட்டணம் செலுத்த வகையற்ற முதியோர் சில தகுதிப் பிரமாணங்களை நிறைவு செய்தால், அவர்களுக்கு மாநகரமே நேரடியாக வீட்டுதவிச் சேவைகளை வழங்கும்.

ரொறன்ரோ நெடுங்கால பராமரிப்பு அகங்கள் - சேவைகள் எனப்படும் அமைப்பினால் முன்வைக்கப்படும் வயதாளர் நாள் நிகழ்வுத்திட்டமும் உங்களுக்கு நலம் பயக்கக்கூடும். சமூகத்தில் வாழும் முதியோர் "ஒரு நாளை வெளியே கழிப்பதற்கும்," சமூக – சுகாதார மேம்பாட்டு நிகழ்வுத்திட்டங்களில் பங்குபற்றுவதற்கும், புதிய நண்பர்களுடன் ஊட்டமளிக்கும் மதிய உணவை உண்பதற்கும் இந்நிகழ்வுத்திட்டம் அரிய வாய்ப்பளிக்கும். இது பராமரிப்பாளர்களுக்கு ஓய்வு கொடுத்து, முதியோர் தமது சொந்த வீடுகளில் தங்கியிருப்பதற்கு உதவும் நிகழ்வுத்திட்டம்.

உங்களுக்கு ஏதாவதொரு மட்டத்தில் தாதிமைப் பராமரிப்பும், உங்கள் அன்றாட வாழ்வில் சொந்தத் துணையும் தேவைப்பட்டால், (வயோதிபர் அகம், தாதிமை அகம் எனப்படும்) நெடுங்கால பராமரிப்பு அகம் ஒன்றை நீங்கள் கருத்தில் கொள்ளலாம். மாநகராட்சி மன்றங்கள் அல்லது இலாப நோக்கற்ற ஈகை அமைப்புகள் வயோதிபர் அகங்களை நடத்தி வருகின்றன. ரொறன்ரோவில் இலாப நோக்கற்ற தாதிமை அகங்கள் சில நடத்தப்பட்டு வருகின்றன. எனினும், பொதுவாக இலாப நோக்குடைய அமைப்புகளே தாதிமை அகங்களை நடத்தி வருகின்றன. ஓய்வுகால அகங்கள், வதிகூடங்கள் ஆகிய மாற்று வசதிகளும் கிடைக்கும்.

ரொறன்ரோ மாநகரத்தால் நடத்தப்படும் நெடுங்கால பராமரிப்பு அகங்கள், வீட்டுதவிச் சேவைகள், வயதாளர் நாள் நிகழ்வுத்திட்டங்கள், ஆதரிப்பு வதிவகம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ரொறன்ரோ நெடுங்கால பராமரிப்பு அகங்கள் - சேவைகள் பகுதியுடன் தொடர்புகொள்ளவும்: 416-392-8906. அல்லது நாடவும்: toronto.ca/ltc.

**வயது மிகுந்தவர்களுக்கான தனிப்பட்ட பொழுதுபோக்கு நிகழ்வுத்திட்டங்களை நான் எப்படிக் கண்டறிவது?**
தனியே வயது மிகுந்தவர்களுக்கென வகுக்கப்பட்ட நிகழ்வுத்திட்டங்கள் மாநகரத்திடம் உண்டு. நீங்கள் புதிய நண்பங்களைச் சந்திக்கலாம், பழைய நண்பர்களைச் சென்று காணலாம், சுறுசுறுப்பாக ஈடுபட்டு உடல்நலத்தோடு இருக்கலாம். முதியோர் நிலையத்தில் இடம்பெறும் நிகழ்வுகள், (பனிச்சறுக்கு விளையாடி, நீந்திப் பொழுதுபோக்குவது உட்பட) பொழுதுபோக்கு நிகழ்வுத்திட்டங்கள், விசேட நிகழ்வுகள், பட்டறைகள், ஒன்றுகூடல்கள் என்பன உங்கள் பொழுதை நிறைக்கும். மாநகர வேடிக்கை வழிகாட்டியில் (FUN Guide) நீங்கள் நாடக்கூடிய நிகழ்வுத்திட்டங்களைக் கண்டறியவும். அல்லது மேலதிக விபரங்களுக்கு மாநகர இணையத்தளத்தை நாடவும்: toronto.ca/parks/torontofun/fun-guide-descriptions.htm#olderadults

பொழுதுபோக்கு நிகழ்வுத்திட்டங்களுக்கு உங்களால் கட்டணம் செலுத்த முடியாவிட்டால், மாநகர வரவேற்புக் கொள்கை நிகழ்வுத்திட்டத்துக்கு நீங்கள் தகுதி பெறக்கூடும். இந்நிகழ்வுத்திட்டம் பற்றிய மேலதிக விபரங்களை பின்வரும் இணையத்தளத்தில் கண்டறியவும்: toronto.ca/parks/welcome_policy.htm.

ரொறன்ரோ மாநகரமும், மத்திய - மாகாண அரசுகளும், பல்வேறு சமூக முகமையகங்களும் முதியோருக்குச் சேவையாற்றி வருகின்றன.

toronto.ca/seniors/subject_dir.htm#housing.

**உங்கள் மாநகரத்தால் உதவ முடியும்.**

பொருளாதாரம் நிலைதளம்பும் இந்தக் காலகட்டத்தில் மாநகரவாசிகளுக்கும் தொழிலகங்களுக்கும் நேரடியாக உதவ ரொறன்ரோ மாநகரம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 2009-ம் ஆண்டுக்கான செயற்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தின் ஓர் அங்கமாக, பொருளாதார மந்தத்தினால் பெரிதும் தாக்கம் விளைந்த துறைகளில் புதிய, மேம்பட்ட நிகழ்வுத் திட்டங்களையும் சேவைகளையும் மாநகரம் அண்மையில் அறிவித்தது. மாநகரவாசிகளும் தொழிலகங்களும் இக்கடுங்காலகட்டத்தில் மேலோங்குவதற்கு உதவும்பொருட்டு மாநகரம் ஏற்கெனவே பற்பல சேவைகளை முன்வைத்துள்ளது. அத்தகைய நடவடிக்கைகளின் பயனாக 2009-ல்:

- தமது வாடகையைச் செலுத்தாதபடியால் வெளியேற்றப்படுவோம் என்று 100 குடும்பங்கள் அஞ்ச நேராது.

- வருமானம் குறைந்த, தமது வாடகையைச் செலுத்தப் பிந்திய 1,300 குடும்பங்கள் நெகிழ்ச்சி வாய்ந்த ரொறன்ரோ வாடகை வங்கியிடம் கடன் பெற்று, வாடகை செலுத்தி, தொடர்ந்தும் தமது வீடுகளில் தங்கியிருக்கவும், வெளியேற்றத்தை அல்லது நொடிப்பைத் தவிர்க்கவும் வாய்ப்புக் கிடைக்கும்.

- தமது வதிவகங்களை விட்டு வெளியேறி, வாடகை குறைந்த வதிவகத்தை நாடவேண்டிய 450 குடும்பங்கள் தமது கடைசி மாத வாடகை-வைப்புத்தெகையைச் செலுத்த இனிமேல் உதவி கிடைக்கும். பெரிதும் முற்றுமுழுதாகச் செலுத்தப்படவேண்டிய அந்த வைப்புத்தொகையை அவர்களுள் அநேகரால் செலுத்த முடிவதில்லை.

- ‘‘சரியான இடத்தில் தொடங்குதல்’’ (“Starting in the Right Place”) திட்டத்தை மாநகரம் துரிதப்படுத்தும். அதன் 14 வேலைவாய்ப்பு-சமூக சேவை அலுவலகங்கள் மற்றும் புதிய இணைய வசதிகள் மூலம் வேலைவாய்ப்பு, கல்வி, பயிற்சி, நிதியுதவி, சிறார் பராமரிப்பு, வதிவகம், சுகாதார உதவிகளைக் கண்டறிவதில் மக்களுக்கு மாநகரம் உதவும். இளையோர் வேலைவாய்ப்பு மேம்பாட்டுக்கான அயல் முதலீடு - கூட்டுறவு நிகழ்வுத்திட்டங்களை மாநகரம் விரிவுபடுத்தும்.

- ரொறன்ரொ வேலைவாய்ப்பு–சமூக சேவைத் துறை, மாநகர மண்டபத்தில் ரொறன்ரோ வேலைவாய்ப்பு மையம் ஒன்றை அமைக்கும். அங்கு முழுச்சேவையாற்றும் வேலைவாய்ப்பு வள நிலையம், மாநகர வெலைவாய்ப்புத் தகவல், YMCA-உடன் சேர்ந்து விருந்தோம்பல் சேவைப் பயற்சித் திட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- ரொறன்ரோ பொது நூலகம் அதன் 99 கிளைகளிலும், 35,000 புதிய நூல்வகைகளை இட்டு, 6,000 பேரை ஆட்கொண்டு, torontopubliclibrary.ca/jobhelp என்னும் அதன் இணையவசதி மூலம் வேலைவாய்ப்பு, பணிவாய்ப்பு, சிறிய தொழிலகம் பற்றிய விபரங்கள் தேட வசதியளித்து, மேலதிக வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தி வேலைவாய்ப்பு நிகழ்வுத்திட்டங்களை விரிவுபடுத்தி, வேலை தேடுவோர்க்கு உதவும்.

- மாநகர நெடுங்கால பராமரிப்பு அகங்களுக்கு அருகில் வசிக்கும், வருமானம் குறைந்த முதியோர் மதிய வேளையில் சிற்றுண்டிச்சாலைக்கு வந்து, சமைத்த சத்துணவு வகைகளைக் குறைந்த விலையில் வாங்கி, பராமரிப்பு அகத்தில் வைத்து அல்லது வெளியே கொண்டுசென்று உண்ணலாம்.

- வயதுவந்தோர் நாள் நிகழ்வுத்திட்டங்கள் மேற்கொள்ளும் நெடுங்கால பராமரிப்பு அகங்கள் தமது சேவைகளை விரிவபடுத்தி, முதியோர் பத்திரமாகச் சந்திக்கும் நிலையங்களைத் தோற்றுவிக்கும்.

- மாநகரம் தற்போதைய இல்லாண்மை நிகழ்வுத்திட்டத்தை விரிவுபடுத்தி, இன்னும் வருமானம் குறைந்த, தகுதிவாய்ந்த முதியோர்க்கு இல்லாண்மைப் பணியாற்றும். எங்கள் முதியோரின் சுதந்திரத்தைப் பேணுவதற்கும், நலவாழ்வுக்குத் துணைநிற்பதற்கும் இத்திட்டங்கள் உதவும்.

- “Gold Star” நிகழ்வுத்திட்டத்தின் மூலம் தொழிலகங்களை உருவாக்கும் பணியை ரொறன்ரொ மேற்கொள்ளும். இது விடயம் கையாள்வதை விரிவுபடுத்தும் அணுகுமுறை ஆகும். கேந்திர தொழில்துறை–அலுவலகங்களை உருவாக்கவதற்கு மாநகர அங்கீகாரம் பெறுவதற்கு இது துணைநிற்கும். 20,000 வேலைவாய்ப்புகளை பேணுவதுடன்/ ஆக்குவதுடன், $2.3 பில்லியன் முதலீடு செய்யும் பத்து திட்டங்கள் “Gold Star Service” பெற்று வருகின்றன. 2009-ல் மேலும் மூன்று திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்துறை, வணிக அலுவலக, நிறுவன அமைப்புத்திட்டங்களை உடனடியாகவே மேற்கொள்ளலாம். திட்டப் பணிப்பாளர் ஒருவரும், பொருளாதார விருத்தி அதிகாரி ஒருவரும் தலைமை ஏற்கும் மாவட்ட மீள்நோக்கு அணி ஒன்றிடம் ஒவ்வொரு திட்டமும் ஒப்படைக்கப்படும். அவர்கள் திட்டத்தை முன்வைப்பவருடனும், தாபனப் பணியாளர்களுடனும் ஊக்கமுடன் ஒத்துழைத்து, அதனை அங்கீகரிப்பதற்கு வேண்டிய அம்சங்களை இனங்கண்டு, எழக்கூடிய பிரச்சனைகளைத் தீர்த்து, சம்பந்தப்பட்டவர் உடன் கவனிக்கப்படுமாறு செய்வார்கள்.

ரொறன்ரோ மாநகர மக்களுக்கும், தொழிலகங்களுக்குமாக மாநகரம் மேற்கொள்ளும் புதிய, விரிவபடுத்திய சேவைகள், நிகழ்வுத்திட்டங்கள் பற்றிய விபரங்களை ஒருங்கே முன்வைக்கும் புதிய இணையப் பக்கங்கள் மாநகர இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ளன.

toronto.ca/torontohelps

**சமூக சமத்துவம், சமத்துவ வாழ்விடங்கள் நோக்கிய நகர்வு**

சமூக பாதுகாப்பு என்பது வன்முறை நிகழாமை மட்டுமல்ல. அது சமூக சமத்துவமும் ஆகும். அத்துடன், அனைவரும், குறிப்பாக நலிவுறும் சமூகங்களைச் சேர்ந்த இளையோரும் முதியோரும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடத்தப்படுமாறு பார்ப்பதும் ஆகும். தம்மால் இயன்ற அனைத்தையும் எய்துவதற்கு அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்குமாறு பார்ப்பதும் ஆகும்.

ரொறன்ரோவே கனடாவின் மிகப்பெரிய நகரம்—அதேவேளை அது வாழ்விடங்கள் மிகுந்த மாநகரமும் ஆகும். எங்கள் வாழ்விடங்களில் நாங்கள் வசிக்கிறோம். அவற்றை நாங்கள் புரிந்துகொள்கிறோம். அவற்றை எங்கள் அகம் என்று அழைக்கிறோம். எனினும் எல்லா வாழ்விடங்களும் சரிநிகராகத் தோற்றுவிக்கப்பட்டவை ஆகா. அவற்றுள் 13 வாழ்விடங்களை ரொறன்ரோ மாநகரம் இனங்கண்டுள்ளது. அங்கெல்லாம் வறுமை மட்டம் உயர்வு. தகைமைக்குக் குறைந்த வேலை. சமூக சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள் கிடையா. ஆதலால் அவ்வாழ்விடங்களுக்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. அங்கெல்லாம் புதிய நிகழ்வுத்திட்டங்களையும், வசதிகளையும் மேற்கொள்வதில் மாநகரம் முதலீடு செய்து வருகிறது. இவ்வாறு முதன்மை அளிக்கப்பட்டுள்ள ரொறன்ரோ மாநகர வாழ்விடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிகழ்வுத்திட்டங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

**இளையோர் தமக்கு இடங்களை வரித்துக்கொள்கிறார்கள்**

மாநகரப் பணியாளர்களும், இளையோரும், இளையோர்-பணியாளர்களும் மேற்படி 13 முதன்மை-வாழ்விடங்களில் இளையோர்க்கான புதிய இடங்களைத் தோற்றுவிப்பதற்கு ஒத்துழைக்குந்தோறும், கூடிக் கற்கிறார்கள். தோற்றுவிக்கப்படும் இடங்களை ஈற்றில் பயன்படுத்தும் இளையோர், முடிபுகள் எடுக்கப்படுவதில் பங்குபற்றுகிறார்கள். எதற்குப் பணம் செலவிடுவது என்பதை முடிவுசெய்வதில் அவர்கள் முன்னின்று பங்குபற்றுகிறார்கள்.

மல்வேண் பகுதியில், மல்வேண் கிளையுடன் உறுதிபட இணைந்து இளையோர்க்கு இடம் காண்பதில் நூலகப் பணியாளர்களுடனும், இளையோர்-பணியாளர்களுடனும், சமூக விருத்திப் பணியாளர்களுடனும் இளையோர் பாடுபடுகிறார்கள். இத்திட்டத்தில் பங்குபற்றும் இளையோருள் ஒருவர், "இடங்காணும் முன்னெடுப்பில் (The SPOT" initiative) உதவக் கிடைத்த வாய்ப்பை நாங்கள் மெச்சுகிறோம். ஒரு நிலையத்தில் இளம் சமூகத்துக்கு வேண்டியது என்ன என்பது எங்களுக்குத் தெரியும்" என்று கூறுகிறார். இவ்வாறு மாநகரப் பணியாளர்கள் இளயோரை ஈடுபடுத்தும் திறனை விருத்திசெய்து, புதுமை புகுத்திச் செயற்படக் கற்குந்தோறும், "இடங்காணும் முன்னெடுப்பு" அவர்களுக்கும் நலம் பயக்கும்.

Weston-Mount Denis, Dorset Park, Flemingdon/Victoria Village, Eglinton East-Kennedy Park, Steeles-L'Amoureaux பகுதிகளிலும் வேறு இடங்கள் காணப்பட்டு வருகின்றன. Partnership Opportunities Legacy (POL) நிதியம், மாநகர பங்கேற்பு அமைப்புகள் ஊடாக மேற்படி திட்டங்கள் அனைத்துக்கும் நிதியுதவி புரியப்படுகிறது.

**உவந்த மாநகர அம்சம், உவந்த மாநகர சேவை**

**ரொறன்ரோவில் உங்களுக்கு உவந்த இடம் உண்டா? அதன் சிறப்பு யாது?**
ரொறன்ரோவில் எனக்கு உவந்த இடம் (லெஸ்லி வீதியும், எக்லிண்டன் வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள) சணிபுறூக் சோலை (Sunnybrook Park) ஆகும். அது எனது வீட்டுக்கு அண்மையில் உள்ளது. சிறந்த பாதைகள் கொண்டது. நான் எனது குடும்பத்துடன் அங்கு சென்று உலாவி மீள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**சிறந்த மாநகர சேவை என்று நீங்கள் எதையாவது கருதுகிறீர்களா?**
ரொறன்ரோ நூலகத்தின் S. Walter Stewart கிளை, Flemingdon Park கிளை இரண்டுக்கும் நான் ஒழுங்காகச் சென்று வருகிறேன். S. Walter Stewart கிளை புதியது, மிகவும் சிறந்த அமைப்புக் கொண்டது, வெளிச்சம் மிகுந்தது. Flemingdon Park கிளையும் எனது வீட்டுக்கு அண்மையில் உள்ளது, தொடுக்கா இணையவசதி படைத்தது.

-Shakib Shaikh, நோர்த் யோர்க்

***இம்மாநகரத்தில் உங்களுக்கு உவந்த இடம் உண்டா? நீங்கள் மிகவும் விரும்பும் மாநகர சேவை என்று எதுவும் உண்டா? எங்களுக்கு எழுதவும்: ourtoronto@toronto.ca***

**ரொறன்ரோ பாட்டுப் போட்டி**

மாநகரத்தின் 175-வது ஆண்டுநிறைவைக் கொண்டாடு முகமாக ரொறன்ரோ பாட்டுப் போட்டி ஒன்றை ரொறன்ரோ மாநகரம் நடத்துகிறது. எங்கள் அதிசய மாநகரத்தை எண்ணி இன்புறும் புத்தம்புதிய பாடல் ஒன்றை, ரொறன்ரோவின் வியத்தகு சுருதியையும், நிகரற்ற பல்வண்மையையும் துதிக்கும் பாடல் ஒன்றையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். எங்கள் இணையத்தளத்தை நாடவும்: oronto.ca/175/song_contest

**றொறன்றோ மாநகர ஒளிப்படப் போட்டி**
**"ஒரு மகத்தான மாநகரத்தை ஒருங்கிணைந்து கட்டியெழுப்புவோம்"**

வேட்கை மிகுந்த றொறன்றோ ஒளிப்படப்பிடிப்பாளர்கள் அனைவரும் கவனிக்கவும்! "ஒரு மகத்தான மாநகரத்தை ஒருங்கிணைந்து கட்டியெழுப்புவோம்" என்னும் தலைப்பில் ஓர் ஒளிப்படப் போட்டியை றொறன்றோ மாநகரம் நடத்தப் போகிறது. றொறன்றோவின் சுருதியையும், வலுவையும், தனித்துவத்தையும் கிளர்த்தவல்ல படிமங்களை நாங்கள் நாடுகிறோம்.

நீங்கள் 18 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் கொண்ட பொழுதுபோக்கு ஒளிப்படப்பிடிப்பாளர் அல்லது துறைசார்ந்த ஒளிப்படப்பிடிப்பாளர் என்றால், உங்கள் கண்களின் ஊடாக றொறன்றோவை எங்களுக்கு காட்டும் வண்ணம், எங்கள் மகத்தான மாநகர வாழ்வை புலப்படுத்தும் மின்ம ஒளிப்படங்களை முன்வைக்குமாறு உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் ஒளிப்படங்களை எங்களுடன் பகிர்ந்து, றொறன்றோ மாநகரத்திடம் விசேட பரிசுகள் பெறுந் தகுதி அடையுங்கள்!

வெல்லும் ஒளிப்படத்தையும், அடுத்த ஒளிப்படங்களையும் றொறன்றோ மாநகரம் இணைய வாயிலாக அறிவிக்கும். அத்த ஒளிப்படங்களையும், மாநகர ஏடுகள், மின்னஞ்சல் தொடர்புச் சேவைகள் என்பவற்றில் பாராட்டுப் பெறும் ஒளிப்படங்களையும் மாநகரம் பயன்படுத்தக் கூடும்.

உள்ளடக்கம், படிமம், ரகம், படைப்புத் திறன், தனித்துவம், போட்டியின் கரு - வகுதி என்பவற்றுக்கு உகந்த தன்மை, முற்றுமுழுதான கண்கவர் தன்மை என்பவற்றைக் கருத்தில் கொண்டே உங்கள் முன்வைப்புகள் கணிக்கப்படும். மூவர் குழாம் ஒன்று முன்வைப்புகளை மட்டுக்கட்டும். நடுவர்கள் அனைவரின் முடிபுகளும் இறுதியானவை.

போட்டியில் கலந்துகொள்வதற்கான கடைசித் திகதி: 2009 யூன் 12-ம் திகதி வெள்ளிக்கிழமை, பி.ப. 11:59 மணிக்கு முன்னர் ஒளிப்படங்கள் முன்வைக்கப்பட வேண்டும். வெல்வோர்க்கு 2009 யூலை மாதம் அறிவிக்கப்படும்.

போட்டி விதிகள், ஒளிப்படம் முன்வைத்தல் பற்றிய விபரங்களுக்கு நாடவும்: www.toronto.ca அல்லது www.flickr.com

உங்கள் ஒளிப்படங்களை முன்வைத்து வெல்க!

**20-நிமிட ரொறன்ரோ சுத்திகரிப்பு**

ஏப்பிறில் 24ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கழிவுவகைகளை அகற்ற உதவுக. Toronto Pizza Pizza உணவகங்கள், மாநகர சமூக நிலையங்கள், குடிமக்கள் நிலையங்களில் பிளாஸ்திக் பை/கையுறை வகைகளைப் பெற்றுக்கொள்ளவும். விபரங்களுக்கும், பதிவுக்கும் நாடவும்: toronto.ca/litter